**இலங்கை போக்குவரத்து சபை - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

இலங்கை போக்குவரத்துச் சபையின் ''சபை'' 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சபையின் நிதிக்கூற்றுகள் தொடர்பாக நான் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. அபிப்பிராயம் மறுதலிப்பதற்கான அடிப்படை பகுதிகளில் கலந்துரையாடியுள்ள விடயங்களில் முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக்கூற்றுகள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயம் பொருட்டு போதியளவிலும் பொருத்தமான கணக்காய்வு சாட்சிகளையும் பெற்றுக்கொள்வறத்கு எனக்கு இயலவில்லை.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நான் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கவில்லை.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஒழுங்குபடுத்தும் சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஒழுங்குபடுத்தும் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக ஒழுங்குபடுத்தும் சபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஒழுங்குபடுத்தும் சபையின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை

நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது ஒழுங்குபடுத்தும் சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை "திட்டமிட்டு பேணுதல்" நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது. பொது நாளேடுகள், பேரேடு, பேரேட்டு உறுதிச்சீட்டு, கொடுப்பனவு உறுதிச்சீட்டு போன்ற பிரதான கணக்கீட்டு அறிக்கைகளை பேணிச் செல்லல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புகள் பின்வரும் தலைப்புகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தலைப்புகளின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பஹா டிப்போவினால் 2022 ஆகஸ்ட் மாதத்தில் ரூபாய்.83,862,900 கூட்டு பெறுமதியான 13,200 லிட்டர் பவுசர்கள் 12 இல் மற்றும் 6,600 படியான 06 பவுசர்களில் டீசல் | 2022 ஆகஸ்ட் மாத இறுதி காலப்பகுதியில் அடிக்கடி விலை தளம்பல் ஏற்பட்டமையால் தற்போது செலுத்தப்பட்ட எரிபொருள் இருப்பின் விலையும் | கொடுப்பனவு உறுதி சீட்டுகளை தயாரிக்கும் போது நிதிப்பிரமாணம் இலக்கம் 225 இற்கு இணங்க கொடுப்பனவு உறுதி சீட்டுகளை |

| | | |
|---|---|---|
| கொள்வனவு செய்தல் இடம்பெற்று இருந்தது. இந்த கொள்வனவுகளுக்கு உரியதாக வெளியிடப்பட்ட கொடுப்பனவு உறுதி சீட்டுகளுக்கு உரிய பட்டியல்கள் அல்லது அதன் பிரதிகள் இணைக்கப்பட்டிராததுடன் அந்த உறுதிச் சீட்டுகளுக்கு இடம்பெற்ற கொடுப்பனவுகள் தொடர்பிலான விபரங்களும் கணக்காய்விற்கு முன்வைக்கப்படவில்லை. | தற்போதைய எரிபொருள் விலை ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளமையால் இந்த கொடுப்பனவுகள் தொடர்பில் தெளிவின்மை ஒன்று ஏற்பட்டுள்ளது. | தயாரித்தல் மற்றும் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.2 இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| உரிய கணக்காய்வு நியமத்தின் தொடர்புடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் கிழக்கு வலயத்திற்கு உரிய உதிரிப்பாகங்களின் இருப்புக்கு மாத்திரம் ரூபாய்.15,639,972 ஆன காலாவதியான மற்றும் பயன்படுத்த முடியாத இருப்புகள் காணப்பட்டன. | பயன்பாட்டுக்கு எடுக்க முடியாது இவ்வாறான உதிரி பாகங்களை கிழக்கு பிரதேசத்தில் மாத்திரம் அல்லாது ஏனைய பிரதேசங்களிலும் காணப்படுகின்றமை இனம் காணப்பட்டுள்ளது. அந்த காலாவதியான இருப்பினை கைதவிர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டவாறு உள்ளது. | ஒவ்வொரு டிப்போவிலும் உள்ள காலாவதியான இருப்பினை இனம் கண்டு மதிப்பிட்டு பயன்பாட்டுக்கு எடுக்க கூடிய இருப்பினை கணக்கு வைப்பதற்கு அல்லது ஏனைய இருப்பினை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 (LKAS 16) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கணக்கின் நியமத்தின் 37 ஆம் பந்திக்கமைய சபையின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொகுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ள படியாக ரூபாய்.75,842,984 தொகையான இனங்கானப்படாத நிலையான சொத்துக்கள் ஏனைய சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | குறித்த தவறு ஏற்பட்டுள்ளது என்பதனை ஏற்றுக் கொள்கின்றேன். | சரியான கணக்கீட்டு நியமித்துக்கமைய சொத்துக்கள் வகைப்படுத்தப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 38 இன் 77 ஆம் பிரிவிற்கு அமைய கணினி மென்பொருட்கள் கட்புல சொத்துக்களாக தனியாக கணக்கு வைக்கப்பட வேண்டிய போதிலும் ரூபாய்.36,426,972 பெறுமதியான கணினி மென்பொருட்கள் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | LKAS 38 இன் பிரகாரம் சில கட்புல சொத்துக்கள் பயன்படுத்துவதற்கு அதனை கட்புலன் அல்லாத சொத்து தொகுதி ஒன்றுடன் இணைக்கும் தேவைப்பாடு காணப்படும் சந்தர்ப்பங்களில் குறித்த கட்புலச் சொத்தானது LKAS 16 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்கான கணக்கீட்டு நியமத்திற்கமைய கணக்கு வைப்பதற்கு இடமளிக்கப்பட்டுள்ளதால் கணினி மென்பொருளை LKAS 16 இன் கீழ் கணக்கு வைக்கப்பட்டுள்ளது. | சரியான கணக்கீட்டு நியமத்திற்கு அமைய கணினி மென்பொருள்கள் கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 (LKAS 16) இன் பிரகாரம் சொத்து ஒன்றின் பெறுமானம் தேய்விடக்கூடிய பெறுமதி அதன் பயன்பாட்டு ஆயுட்காலத்திற்கு அமைய கிரமமாக தேய்விடப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டினுள் கணினி இயந்திரங்கள், பேருந்துகளின் எஞ்சின்கள், பயணச்சீட்டு இயந்திரங்கள் மற்றும் கணினி மென்பொருட்கள் ரூபாய்.110,968,183 இனால் அதிகரித்து பெறுமானத் தேய்விடப்பட்டிருந்ததன் காரணத்தால் மீளாய்வாண்டின் இலாபம் அந்த அறவினால் குறைந்திருந்தது. | குறித்த வழு இடம்பெற்றுள்ளது என்பதை ஏற்றுக் கொள்கின்றேன். | நியமித்துக்கமைவான பெறுமானத்தேய்வு சீராக்கங்களை சரியான இலாப கணக்குகளை கணக்குகளில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 07 (LKAS 07) இன் பிரகாரம் காசு பாய்ச்சல் கூற்றினை தயாரிக்கும் போது நிதி செயற்பாடுகளின் கீழ் அறிக்கையிடப்பட வேண்டிய ஊழியர் பங்கு | குறித்த வழு இடம்பெற்றுள்ளது என்பதை ஏற்றுக் கொள்கின்றேன். | காசுப்பாய்ச்சல்களை தயாரிக்கும் போது நியமித்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வளங்களுக்கு உரியதாக செலுத்தப்பட்டிருந்த ரூபாய்.77,033,188 முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான நிதிநிலைமைக் கூற்றின் நடைமுறை பணிகளின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்த அளவான ரூபாய்.410,710 தொகையானது காசு பாய்ச்சல் கூற்றில் செயற்படு மூலதற்கான சீராக்கமாக ரூபாய்.9,365,056 காண்பிக்கப்பட்டிருந்தது. நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்த நடைமுறை பணிகள் செயற்படு மூலதன மாற்றத்திற்கு சீராக்கப்பட்டமையால் செயற்படு மூலதனத்தின் மீதியானது மேற்படி பெறுமதியினால் அதிகரித்திருந்தது. அவ்வாறே ஆண்டின் மூலதன பணிகளுக்காக செலவிடப்பட்ட ரூபாய்.410,710 ஆன தொகை முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த வழு இடம்பெற்றுள்ளது என்பதை ஏற்றுக் கொள்கின்றேன். | நடைமுறை வேலைகளுக்கு உரிய வருடாந்த செலவினம் காசுப்பாய்ச்சல் கூற்றில் சரியாக காண்பிக்கப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக காணிகள் மற்றும் கட்டிடங்களின் மீள்மதிப்பீட்டு பெறுமதி முறையே ரூபாய்.18,894,925,500 மற்றும் ரூபாய்.2,292,972,501 எனுமாறு ரூபாய்.21,187,898,001 ஆக காணப்பட்டது. எனினும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் குறிப்பில் கட்டிடங்களின் கீழ் | அனைத்து கணக்கு வைத்தல் நடவடிக்கைகளும் Accpack மென்பொருளின் ஊடாக இடம்பெறுகின்றமையால் எல்லா சந்தர்ப்பங்களிலும் பேரீட்டு கணக்கின் மீதி பரீட்சை மீதியின் மீதியுடன் சமனாக காணப்படுவதுடன் அந்த பெறுமதி நிதிநிலைமை கூற்றின் மீதிக்கும் சமனானதாக காணப்படுகிறது. | சொத்துக்கள் பட்டோலையின் மீள்மதிப்பீட்டு பெறுமதி மற்றும் ஆண்டின் உள்ளான சேர்பனவுகள் தனித்தனியாக பதிவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காண்பிக்கப்பட்டிருந்த மீள் மதிப்பீட்டு பெறுமதியான ரூபாய்.2,300,199,459 தொகையானது மீளாய்வாண்டின் சேர்ப்பனவாக கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டினுள் கட்டிடங்களின் புதிய சேர்க்கப்பட்ட பெறுமதியான ரூபாய்.7,226,958 பெறுமதி ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் குறிப்பில் கட்டிடங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஏ) | ஹட்டன் டிப்போவில் ரூபாய்.14,969,516 பெறுமதியுடைய 533 டயர்கள் பின்காட் அட்டைகள் நாளதுவரையாக்கப்படாமை மற்றும் டயர்கள் முறையாக களஞ்சியப்படுத்தப்படாமையால் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக காணப்பட்ட இருப்பு மீதி பௌதீக பரிசோதனையை செய்ய முடியாதிருந்தது. | ஹட்டன் டிப்போவின் களஞ்சிய கட்டுப்பாட்டாளரால் பின்காட்கள் நாளதுவரை ஆக்கப்படாமை மற்றும் பொருட்கள் உரிய முறையில் களஞ்சியப்படுத்தப்பட்டிராமையால் இந்த தவறு இடம்பெற்றுள்ளது. | களஞ்சிய இருப்பு மீதிகளை நாளதுவரையாகவும் இருப்புகளை முறையாகவும் களஞ்சியப்படுத்தி பேணிச் செல்ல வேண்டியமை. |

### 1.5.3 கணக்கீட்டு கொள்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை போக்குவரத்து சபையின் வேருகர மத்திய வேலை தளத்திற்கு உரித்தாக காணப்பட்ட இலங்கை இராணுவத்தின் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் போதனா மருத்துவமனை மற்றும் மோட்டார் போக்குவரத்து திணைக்களம் அமைந்துள்ள காணிகளின் பெறுமதி ரூபாய்.6.226 மில்லியனுக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் | வேரஹர மத்திய வேலை தளத்திற்குரிய முழுமையான காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபாய்.6,226 மில்லியன் ஆகும். இதனுள் ரூபாய்.5,054 மில்லியன் அமைச்சினால் செலுத்தப்பட வேண்டியதுடன் செலுத்தப்பட்ட தொகை ரூபாய்.4,954 மில்லியன் ஆகும். எஞ்சிய ரூபாய்.100 மில்லியன் மற்றும் காணிக்கு பெற்றுக்கொள்ள | காணிகளின் பெறுமதிக்காக பெறவேண்டிய மீதிகளை சரியாக இனம் கண்டு கணக்கு வைப்பதற்கு அல்லது வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அப்பெறுமதிக்கு பாதுகாப்பு அமைச்சினால் ரூபாய்.5,054 மில்லியன் செலுத்துவதற்கு இணங்கி இருந்தது. அத்தொகையில் ரூபாய்.4,954 மில்லியன் 2021 டிசம்பர் 31 ஆம் திகதியளவில் பகுதிகளாக பொதுத்திறைசேரியினால் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு செலுத்தப்பட்டிருந்தது. தெற்கமைய இச் சொத்துக்களின் மதிப்பீட்டு பெறுமதியான ரூபாய்.6,226 மற்றும் சொத்துக்களை கையளித்தமையினால் ஏற்பட்ட நட்டமான ரூபாய்.1,172 மில்லியன் பெறுமதி கணக்குகளில் இருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வேண்டிய ரூபாய்.1,272 மில்லியன் பணமானது கணக்கு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்கின்றேன். | |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டில் வாகன விபத்துகள் தொடர்பில் தொடரப்பட்டிருந்த 297 வழக்குகளில் 77 வழக்குகளுக்கான நட்டு ஈடாக ரூபாய்.11,832,191 ஆன தொகையும் தொழிலாளர் பிணக்குகள் தொடர்பிலான 22 வழக்குகளுக்கு உரிய முறையில் சமூகமளிக்காத காரணத்தால் தொடரப்பட்ட வழக்குகளில் தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ தவறுகள் காரணமாக ரூபாய்.1,830,747 ஆன தொகை நட்ட ஈடாக செலுத்துவதற்கும் சபையின் ஊழியர்களுக்கு பதவியிறக்கல் தொடர்பில் முடிவுறுத்தப்பட்ட வழக்குகளுக்கு 2,439,370 எனும் நட்டு ஈடு எனுமாறு ரூபாய்.16,102,308 கூட்டுத்தொகை செலுத்த வேண்டியிருந்தது. எனினும் | 220 வாகன விபத்து வழக்குகள் விசாரிக்கப்பட்டுவாறு உள்ளது என்பதை ஏற்றுக் கொள்வதுடன் 10 தொழிலாளர் பிணக்கு வழக்குகள் 2021 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டுள்ளது. சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டமை தொடர்பிலான சுமார் 47 வழக்குகள் விசாரிக்கப்பட்டவாறு உள்ளமையை ஏற்றுக்கொள்வதுடன் இதற்கான நட்ட ஈட்டினை செலுத்துவதற்கு நேர்கின்றமையால் வழக்கு நடவடிக்கைகளை துரிதமாக நிறைவு செய்வதற்கு அல்லது சமாதானத்திற்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | வாகன விபத்துகளை குறைத்துக் கொள்வதற்கு உரிய வேலைத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டியதுடன் நட்ட ஈட்டினை மீளளிப்பு செய்வதற்கு உரிய ஏற்பாடுகள் கணக்குகளில் மேற்கொள்ளப்பட வேண்டும். |

இதற்கு தேவையான நிதி ஏற்பாடுகள் கணக்குகளில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.5.4 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான காசுப்பாய்ச்சல் கூற்றில் மீள் மதிப்பீட்டு ஒதுக்கமாக கணக்கு வைக்கப்பட்டிருந்த ரூபாய்.5,054,000,000 பெறுமதி மற்றும் அறவிட முடியா கடனுக்கான ஒதுக்கங்களாக பதிவு செய்யப்பட்டிருந்த ரூபாய்.39,713,200 ஆன பெறுமதியின் தேறிய பெறுமதி ரூபாய்.5,014,286,800 ஆன பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றில் தேய்விடப்பட்டிருந்த காரணத்தால் 2021 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான தேறிய காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் மீதி ரூபாய்.2,790,675,691 ஆன வங்கி மேலதிக பற்றாக காணப்பட்டது. அதற்கமைய 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் மீதியும் ரூபாய்.1,709,451,775 ஆன வங்கி மேலதிக பற்றாக காணப்பட்டது. அதனால் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான காசு பாய்ச்சல் கூற்றின் காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் பெறுமதி ரூபாய்.5,014,286,800 இனால் மிகைக் கணிப்பீட்டுக்கு உள்ளாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக தயாரிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றின் ஒப்பீட்டு பெறுமதிகளில் காண்பிக்கப்பட்டிருந்த மீதிகளில் உள்ளடங்கி இருந்த போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் அச்சிடும் போது தவறுதலாக இந்த பெறுமதி அச்சிடப்பட்டிராமை. | காசுப் பாய்ச்சல் கூற்றினை தயாரிக்கும் போது இவ்வாறான தவறுகள் இடம்பெறாது இருப்பதற்கு பொறுப்புடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டுக்கு முன்னர் கொள்வனவு | குறித்த வழு இடம்பெற்றுள்ளது. | கணக்காய்வினால் சுட்டிக்காண்பிக்கப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்த கணினிகளுக்கு உரிய 2021 ஆம் ஆண்டில் ரூபாய்.1,077,778 கூடுதலாக தேய்விடப்பட்டிருந்த போதிலும் அவ்வழுவானது 2022 ஆம் ஆண்டிற்கான நிதி கூற்றுகளில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | குறைபாடுகளை நிவர்த்தி செய்து நடபாண்டின் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | 2021 ஆம் ஆண்டில் பயணச்சீட்டு இயந்திரங்கள் ரூபாய்.5,393,206 இனால் அதிகரித்து தேய்விடப்பட்டிருந்ததுடன் அந்த தவறினை திருத்துவதற்காக 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுகளில் அவற்றுள் ரூபாய்.52,850 மாத்திரம் சீராக்கப்பட்டு இருந்ததுடன் எஞ்சிய பெறுமதியான ரூபாய்.5,340,356 இற்கான சீராக்கங்கள் மேற்கொள்ளப்படாத காரணத்தால் திரண்ட நட்டம் அப்பெறுமதியினால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | குறித்த வழு இடம்பெற்றுள்ளது. | சரியான பெறுமானத்தேய்வு பெறுமதி கணக்குகளில் உள்ளடக்கப்பட்டு திரண்ட இலாபம் கணக்குகளில் சரியாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக நிதிநிலைமை கூற்றில் காசு மற்றும் காசுக்கு சமனானவற்றின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்த ரூபாய்.2,311,836,019 தொகையான சேமிப்பு கணக்கின் மீதி கட்டுபத்த, மஹரகம, மட்டக்குளிய மற்றும் காலி ஆகிய டிப்போக்களின் சேமிப்பு கணக்குகளின் மீதியுடன் ஒப்பீடு செய்யப்பட்டபோது திரண்ட மீதியாக ரூபாய்.1,236,332 ஆன தொகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | குறித்த வழு இடம்பெற்றுள்ளது என்பதனை ஏற்றுக் கொள்கின்றேன். அந்த வழு 2023 ஆம் ஆண்டில் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது. | நிதிக்கட்டுப்பாட்டிலான நலிவு ஒன்று என்பதால் அதனை திருத்தி கணக்கு வைக்க வேண்டியதுடன் எதிர்காலத்தில் அவ்வாறான குறைபாடுகள் நிகழாது இருப்பதற்கு பொறுப்புடன் செயல்பட வேண்டும். |
| (உ) | காணிகள் மற்றும் கட்டிடங்களின் மீள் | கணிப்பிடப்பட்ட மீள்மதிப்பீட்டு இலாபமான | சரியான பெறுமானத்தேய்வு |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பீட்டு இலாபத்தினை கணிப்பீடு செய்யும் போது 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ள படியான திரண்ட பெறுமான தேய்வு பெறுமதிக்கு நடபாண்டின் கட்டிடங்கள் மீதிக்கு உரிய பெறுமான தேய்வு பெறுமதியான ரூபாய்.9,705,106 ஆன பெறுமதி சேர்க்கப்பட்டு மீள் மதிப்பீட்டு இலாபம் கணிப்பிடப்பட்டிருக்கவில்லை. அத்துடன் 2022 டிசம்பர் 31 திகதியில் உள்ளபடியாக கணக்கிடப்பட்ட மீள் மதிப்பீட்டு இலாபம் ரூபாய்.20,976,927,250 ஆக காணப்பட வேண்டிய போதிலும் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக உரித்துக்களிளான மாற்றங்கள் கூற்றில் ஒதுக்கங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த மீள் மதிப்பீட்டு இலாபம் ரூபாய்.20,985,508,217 ஆகும். அதற்கமைய மீள் மதிப்பீட்டு இலாபம் ரூபாய்.8,580,967 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | ரூபாய்.20,985,508,217 ஆன பெறுமதி உரித்துக்கள் மாற்றங்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அப்பெறுமதி 2023 ஆம் ஆண்டின் பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டு உள்ளபடியான பெறுமானத்தேய்வு இலாபமாக சமர்ப்பிக்கப்பட இயலும். | சீராக்கப்பட்டு மேலும் மீள் மதிப்பீட்டு இலாபம் கணிப்பிடப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஊ) | இரத்மலான எரிபொருள் நிரப்பு நிலையத்தின் நாளாந்த விற்பனை அறிக்கைகளுக்கு அமைய மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளபடியான டீசல் விற்பனை வருமானம் ரூபாய்.1,554,296 இனால் அதிகரித்தும் பெட்ரோல் விற்பனை வருமானம் ரூபாய்.12,338,750 இனால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்த காரணத்தால் எரிபொருள் விற்பனையினால் கிடைத்த மொத்த தேறிய வருமானம் ரூபாய்.10,784,454 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | ஆண்டின் உண்மையான விற்பனைகள் மற்றும் இறுதி கணக்குகளில் உள்ள விற்பனைகள் ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாட்டுக்கு காரணமானது காசு கிடைக்காத எண்ணெய் விநியோகித்தல், CPC கூப்பன் அட்டைகளின் அடிப்படையில் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் எண்ணெய், இரத்மலான டிப்போவிற்கு வங்கிக்கு செல்வதற்கு எரிபொருள் நிரப்பு நிலையத்தின் மோட்டார் சைக்கிள் மற்றும் மின் பிறப்பாக்கி ஆகியவற்றுக்கு எண்ணெய் வழங்குதல் | முறையான உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறையின் கீழ் வருமானம் உரிய முறையில் இனம் காணப்பட்டு பெறுமதி கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கணக்கு வைக்கப்படாமையும் முன்னர் காசோலைகளை வைப்புச் செய்து எண்ணெய் பெற்றுக்கொண்ட நிறுவனங்கள் பெற்றுக்கொண்டு எண்ணெய் தொடர்பிலான சரியான பெறுமதி கணக்கு வைக்கப்படாமையும் ஆகும். | |
| (எ) | இரத்மலான எரிபொருள் நிரப்பு நிலையத்தின் மாதாந்தம் தயாரிக்கப்படும் நாளாந்த விற்பனை விபரத்திற்கமைய மாதத்தின் இறுதியில் எஞ்சியுள்ள எரிபொருள் இருப்பு உள்ளபடியான எரிபொருள் இருப்புடன் ஒப்பிடப்பட்ட போது ரூபாய்.4,876,320 பெறுமதியான 15,421.96 லிட்டர் டீசல் மற்றும் ரூபாய்.2,647,897 பெறுமதியான 8,349.46 லிட்டர் பெட்ரோலின் பற்றாக்குறை காரணமாக ரூபாய்.7,524,217 கூட்டுத்தொகையான வருடாந்த இறுதி இருப்பு குறைத்து காண்பிக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் இலாபமும் அந்த அறவினால் குறைத்து வெளிப்படுத்தப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | எரிபொருள் இருப்பு மீதிகளில் புத்தக பெறுமதி அதற்கடுத்த நாள் எரிபொருள் விநியோகிக்கும் போது ஆரம்ப மீதியாக கருதப்பட வேண்டிய போதிலும் உண்மையில் அடியிதழ் சேர் புத்தகத்தின் பதிவிற்கமைய அதற்குரிய அளவீடு அத்திகதியின் ஆரம்ப இருப்பாக பதிவு செய்தலே இடம்பெற்றிருந்தது. | உள்ளபடியான இருப்பு எரிபொருள் இருப்பிற்கமைய இறுதி இருப்பு கணிப்பிடப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஏ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் கடந்த வருடங்களின் சீராக்கமாக ரூபாய்.277,733,205 காண்பிக்கப்பட்டிருந்ததுடன் கணக்கு குறிப்புகளிலும் ஒருங்கிணைந்த பரீட்சை மீதியிலும் இத் தொகையானது ரூபாய்.335,325,734 ஆக பதிவு செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய காசு பாய்ச்சல் கூற்றில் கடந்த வருடங்களின் சீராக்கமாக ரூபாய்.57,592,529 குறைத்து பதிவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஒருங்கிணைந்த பரீட்சை மீதியில் ரூபாய்.335,325,205 ஆக பதிவு செய்யப்பட்டுள்ள மீதி காசுப்பாய்ச்சல் கூற்றின் கடந்த வருடங்களுக்குரிய சீராக்கங்கள் ரூபாய்.277,733,205 மற்றும் குத்தகை பெறுமதியிலான வேறுபாடுகளின் கீழ் இடம் பெற்றுள்ள சீராக்கங்கள் ரூபாய்.57,592,000 ஆக உள்ளடக்கப்பட்டுள்ளது. | குத்தகை பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றில் தனித்தனியாக வெளிப்படுத்தபட்டிராமையால் இவ்வாறான வழுக்கள் ஏற்படுவதனை தவிர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | மட்டக்குளிய டிப்போவினால் மக்கள் வங்கியில் பேணிச் செல்லப்படும் நடைமுறை கணக்கிற்கு உரிய 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக தயாரிக்கப்பட்ட வங்கி இணக்க கூற்றிற்கைய காசு புத்தகத்தின் வங்கி மீதியாக ரூபாய்.20,109,442 ஆன வங்கி மேலதிக பற்று காண்பிக்கப்பட்ட போதிலும் அது இறுதி கணக்குகளில் ரூபாய்.9,184,280 ஆன வங்கி மேலதிக பற்று மீதியாக காண்பிக்கப்பட்டிருந்தது. இதனால் இறுதி கணக்குகளில் வங்கி மேலதிக பற்று மீதி ரூபாய்.10,925,162 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | குறித்த வழு இடம்பெற்றுள்ளது என்பதை ஏற்றுக் கொள்கின்றேன். | வங்கி மீதிகளின் தவறுகள் மீளாய்வாண்டின் காசு மீதிக்கு தாக்கம் அளிக்கின்றமையால் இவ்வாறான வழுக்கில் ஏற்படாதிருக்க பொறுப்புடன் செயல்பட வேண்டும். |

### 1.5.5 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி (ரூபா) | தொடர்புடைய அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி (ரூபா) | வேறுபாடு (ரூபா) | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளபடியான இயந்திர உபகரணங்கள், மோட்டார் வாகனங்கள், அலுவலக உபகரணங்கள், கணினி இயந்திரங்கள், பேருந்துகள், பயணச்சீட்டு இயந்திரங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களுக்கு உரியதாக இறுதி கணக்கில் காண்பிக்கப்பட்டிரு | 13,615,181,245 | 10,926,969,902 | 2,688,211,342 | 2017 ஆம் ஆண்டு முதல் 2022.12.31 ஆம் திகதியில் உள்ளபடியான பேரேட்டு கணக்கின் மீதி சரியானது என்பதும் குறித்த நிலையான சொத்துக்கள் பட்டோலையும் சரியான முறையில் நாளதுவரை ஆக்கப்படாமையின் | பட்டோலைகளை நாளவதுவரையாக மற்றும் துல்லியமாக கணக்குகளுக்கு எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| ந்த மீதி மற்றும் பட்டோலைகளின் பிரகாரம் உள்ள மீதிகளுக்கிடையே ரூபாய்.2,688,211,342 ஆன வேறுபாடு ஒன்று காணப்பட்ட போதிலும் அதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அடிப்படையில் இந்த தவறு ஏற்பட்டுள்ளது என்பதனையும் ஏற்றுக் கொள்கின்றேன். |

### 1.5.6 கணக்காய்வுக்கான சான்றுகளின்மை

| | விடயம் | தொகை (ரூபா) | முன்வைக்கப்படாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான நிதி கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபாய்.11,384,538,382 பெறுமதியான சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் வங்கி மீதிகளில் உள்ளடங்கியுள்ள ரூபாய்.1,290,782,782 பெறுமதியுடைய செயல்படுத்தப்படாத கணக்கு மீதிகளுக்கான மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் விரிவான பட்டோலைகளும் ரூபாய்.4,156,211,492 பெறுமதியுடைய பங்கு மூலதனத்திற்காக பங்கு சான்றிதழ்கள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்களும், ரூபாய்.156,195,337 பெறுமதியான நிலையான வாய்ப்புக்களுக்கான சொத்துவகை மற்றும் விரிவான பட்டோலைகளும், | 11,384,538,382 | மீதி உறுதிப்படுத்தல்கள், விரிவான பட்டோலைகள், பங்குச் சான்றிதழ்கள், நிலையான வைப்பு மற்றும் முதலீட்டு சான்றிதழ்கள் மீதி உறுதிப்படுத்தல்கள், காலப்பகுப்பாய்வுகள், வங்கி இணக்கங்கள் மற்றும் வங்கி கூற்றுக்கள். | கணக்கு மீதிகளுக்கு உரிய விபரங்கள் மற்றும் பட்டோலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பதனை ஏற்றுக் கொள்கின்றேன். மேலதிக கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு தேவையான தகவல்களை வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கின்றேன். | கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் இறுதி கணக்குகளில் சமர்ப்பிக்கும் போது கணக்குகளுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

ரூபாய்.753,363,548 பெறுமதியுடைய நிலையான வாய்ப்புக்கள் மற்றும் முதலீடுகளில் நிலையான வைப்புச் சான்றிதழ் பத்திரங்களும், ரூபாய்.4,571,242,599 பெறுமதியுடைய வியாபார கடன் கொடுத்தோர் தொடர்பான விரிவான பட்டோலைகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்களும் ரூபாய்.89,191,198 பெறுமதியுடைய வியாபார கடன்பட்டோர் மற்றும் வழியில் உள்ள பணத்திற்கான மீதி உறுதிப்படுத்தல்களும் விரிவான பட்டோலைகளும், ரூபாய்.267,951,474 பெறுமதியுடைய முற்கொடுப்பனவு செலவினங்களுக்காக காலப்பகுப்பாய்வும் சப்ரகமுவ மற்றும் கிழக்கு பிரதேசங்களுக்கு உரிய 23 நடைமுறை கணக்குகளுக்குரிய ரூபாய்.7,551,643 தொகையான வரவு மீதிகள் மற்றும் ரூபாய்.92,048,309 தொகையான செலவு மீதிகளுக்கான வங்கி இணக்கங்கள், வங்கி கூற்றுகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தும் கடிதங்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் நிதிநிலைமை கூற்றில் ஏனைய நடைமுறை அல்லாத பொறுப்புக்களின் கீழ் தீர்ப்பனவு செய்யப்படாத இலங்கை போக்குவரத்து சேவையின் ஊழியர் நலன்புரி நிதியத்தின் பங்களிப்பாக செலுத்த வேண்டிய கணக்கு மீதி காண்பிக்கப்பட்டிருந்தது டன் அம் மீதி 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன் கொண்டுவரப்படுகின்ற மீதி என்பது அவதானிக்கப்பட்டது. எவ்வாறான போதிலும் அவ்வாறான ஊழியர் நலன்புரி நிதிய பணம் போக்குவரத்து சபையினால் ஊழியர் நலன்புரி நிலயத்திற்கு உள்ளபடியாக செலுத்த வேண்டிய மீதி என்பதை உறுதிப்படுத்துவதற்கு எந்த சான்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 1,860,824,837 | உறுதிப்பதுத்தல் களுக்கான எழுத்து மூல சான்றுகள் அதாவது விரிவான பட்டோலைகள் மற்றும் மீதி உறுதிப்படுத்துங் கள். | இந்த கணக்குப்பதிவுகளை மேற்கொள்ளும் போது இடம்பெற்றுள்ள தவறொன்று என்பது அவதானிக்கப்படுவது டன் தலைமை அலுவலகத்தின் கணக்குகள் பிரிவிலிருந்து அந்த தவறுகளை திருத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள து. | செயற்பாடு அல்லாத இவ்வாறான தவறான கணக்கு மீதிகள் உரிய முறையில் கணக்குகளில் இருந்து அகற்றப்பட்டு கணக்குகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக ஏனைய பெற வேண்டிய வருமானமாக சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த ரூபாய்.1,549,623,472 தொகை போலீஸ் அனுமதிப்பத்திர மீதியினுள் 10 வருடங்களை விஞ்சிய ரூபாய்.44,957,258 தொகையும் 05 முதல் 10 வருடங்களுக்கு இடைப்பட்ட | நிதி ஆண்டுக்குரிய அனைத்து பொலிஸ் உறுதி சீட்டுகளுக்குமாக பெற வேண்டிய தொகை கிடைக்காததுடன் அதனால் டிப்போவின் கணக்கு அறிக்கைகளை சரியாக பேணிச்செல்ல முடியாதுள்ளது. அவ்வாறே தலைமை அலுவலகத்திற்கு | பெறவேண்டிய பொலிஸ் அனுமதிப்பத்திர மீதியினுள் இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட அறவிடப்படாத காசுமீதிகள் அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| ரூபாய்.91,395,964 ஆன மீதியும் 02 முதல் 05 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபாய்.120,493,842 ஆன மீதியும் காணப்பட்ட போதிலும் அம் மீதிகளை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொலிஸ் தலைமையகத்தில் இருந்து கிடைக்கும் பணத்தை அந்தந்த டிப்போக்களுக்கு உரியதாக செலுத்த வேண்டிய பணமாக பகிர்ந்து அளித்தல் இடம்பெறாமையால் கணக்கு நடவடிக்கைகளின் தவறுகள் இடம்பெறுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. | |

**1.6.2 செலுத்த வேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான வியாபார கடன்கொடுத்தோர் மீதியினுள் மற்றும் ஏனைய கடன்கொடுத்தோர் மீதியினுள் 02 வருட காலத்தினை விஞ்சிய முறையே ரூபாய்.1,495,204,034 மற்றும் ரூபாய்.90,864,377 எனுமாறு ரூபாய்.1,586,068,411 கூட்டுத் தொகையான தீர்க்கப்படாத கடன் மீதிகள் காணப்பட்டது. | வழங்குனர்களால் குறித்த உறுதிப்படுத்தல் கடிதங்களை வழங்காத காரணத்தால் இந்த மீதிகளை திருத்துவதற்கு முடியாதுள்ளது. நீண்ட காலமாக முன்கொண்டு வரப்படும் இம்மீதிகள் தொடர்பில் பிரதேச மட்டத்தில் உரிய விபரங்களை வரவைத்து எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | இரு வருட காலத்தினை காலத்தினை விஞ்சி உள்ள அந்த கடன் கொடுத்தோர் மீதிகளை தீர்க்கப்பட்டு கணக்குகள் நாளதுவரையாக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான ரூபாய்.3,522,347,457 பெறுமதியான வியாபார கடன்கொடுத்தோர் மீதியினுள் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் காணப்பட்ட ரூபாய்.21,698,022 தொகையான வரவு மீதி ஒன்று உள்ளடக்கப்பட்டிருந்த காரணத்தால் கணக்கு வைக்கப்பட்டிருந்த கடன் கொடுத்தோர் மீதி அந்த அறவினால் குறைத்துக் காண்பிக்கபட்டிருந்தது. | இந்த கடன் கொடுத்தோர் மீதியினுள் தவறுதலாக கடன்பட்டோர் மீதி ஒன்று உள்ளடங்கியுள்ளதுடன் 2023 ஆம் ஆண்டில் திருத்துவதற்கு உரிய நடவடிக்கை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | இரண்டு வருடங்களை விட விஞ்சிய கடன்கொடுத்தோர் மீதிகளை சரியாக இனம் கண்டு தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது அதற்காக கணக்குகளில் ஒதுக்கங்கள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுகளில் ஊழியர் நலன்புரி நிலையத்திற்கு உரிய பங்களிப்பாக செலுத்தப்படாத மீதி ரூபாய்.256,503,445 காணப்பட்டதுடன் அம் மீதியினுள் 10 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபாய்.37,041,436 தொகையும் கமா 05 முதல் 10 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபாய்.191,712,461 மீதியும் 02 முதல் 05 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபாய்.7,850,445 மீதியும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறான போதிலும் சபையினால் பேணிச் செல்லப்படும் ஊழியர் நலன்புரி நிதியத்திற்கான பங்களிப்பு பணம் செலுத்தப்பட்ட தரவுகளுக்கு அமைய தொடர்ந்தும் இனங்காணப்படாத செலவு மீதியின் கொடுப்பனவுகளினுள் உள்ள உண்மையான செலவு மீதியா என்பது தொடர்பில் கணக்காயில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | செலுத்தாத மீதியாக கணக்காய்வினால் இனம் காணப்பட்டுள்ள ரூபாய்.256.5 மில்லியன் ஆன தொகையை கணக்கிட்டு வழு காரணமாக கணக்கு அறிக்கைகளில் காண்பிக்கப்பட்ட போதிலும் தொழிலாளர் அலுவலகத்தின் அறிக்கைகளுக்கமைய இ.போ.ச. இனால் 2022 ஆம் ஆண்டுக்கு செலுத்த வேண்டிய அனைத்து கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | ஊழியர் நலன்புரி நிதிய மீதியினுள் காணப்படும் நிலுவை மீதியை உரிய முறையில் இனம் கண்டு செலுத்த வேண்டிய மீதியினை செலுத்தி தீர்ப்பதற்கும் தவறான கணக்கு மீதிகளை உரிய முறையில் கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான நிதிநிலைமைக் கூற்றில் வியாபாரம் மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய செலவினங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த செயற்படுத்தப்படாத 13 கணக்குகளுக்கு உரிய ரூபாய்.1,084,753,124 பெறுமதியுடைய மீதி ஒன்று காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | முன்பிருந்து முன்கொண்டு வரப்படும் மீதி ஒன்று என்பதால் அவற்றை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு இயலுமை ஒன்று காணப்படவில்லை. | இனங்கான முடியாத மீதிகளை உரிய முறையில் கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கு அல்லது அவற்றுக்கான ஒதுக்கங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 முற்பணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளபடியான உள்நாட்டில் கொள்வனவுகளுக்கான முற்பண கணக்கில் ரூபாய்.1,378,085,248 ஆன மீதியொன்று காணப்பட்டதுடன் அதற்கான பட்டோலைகளை வழங்காத காரணத்தால் அதன் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்ததுடன் அவற்றுள் ரூபாய்.1,373,773,207 தொகையான மீதிகள் 02 முதல் 10 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமாக முன்கொண்டு வரப்படுகின்றமை வெளிப்படுத்தப்பட்டது. | குறித்த வழு இடம்பெற்றுள்ளது. இந்த முற்பண கணக்கின் மீதி 2011 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையிலும் இடம் பெற்ற முற்பண கொடுபனவுகளை கொண்டுள்ளது. முற்பணங்களை தீர்ப்பதற்குரிய மூல ஆவணங்களை பரிசோதித்து முற்பண கணக்கு மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | குறித்த மீதிகளை சரியாக இனம் கண்டு செயலிழந்த மீதிகளை கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.7 தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை போக்குவரத்துச் சபையில் சேவையாற்றும் உத்தியோகத்தர் ஒருவரால் சபைக்கு ஒதுக்கப்பட்ட வாகன வாடகைக்கு வழங்கப்பட்ட நிறுவனத்தின் ஊடாக தனது தனிப்பட்ட வாகனத்தினை சபைக்கு வழங்கி அதற்காக மாதாந்த வாடகையாக ரூபா 39,850 படியாக 2020 சனவரி 22 ஆந் திகதி முதல் 2022 மே 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 1,116,331 ஆன தொகை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை. | இவ்வாறான கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறுவதனை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 39(2) பிரிவு | தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 11 ஆம் பிரிவிற்கமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் சபையின் தலைவருக்கு வழங்கப்படும் விரிவான முகமைத்துவ கணக்காய்வு அறிக்கை கிடைத்த பின்னர் அது தொடர்பில் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் நடைமுறை ஒன்று அல்லது விடயம் ஒன்று தொடர்பில் செயல்படும் அல்லது செயற்படாதிருப்பதற்கு உரிய காரணங்கள் காணப்படின் அது தொடர்பில் 03 மாதங்களினுள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு காரணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியமையால் இலங்கை போக்குவரத்து சபையின் 2021 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதக்கூற்றுக்கள் உள்ளடங்களாக அதன் பணிகள் தொடர்பில் 2022 அக்டோபர் 31 ஆம் திகதி தலைவருக்கு சமர்ப்பிக்கப்பட்ட விரிவான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்காக 2023 ஜுன் 12 ஆம் திகதி வரையிலும் பதில் வழங்கப்படவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை கிடைக்க பெற்று 03 மாதங்கள் கடப்பதற்கு முன்னர் பதில் வழங்கப்பட வேண்டும். |
| (ஆ) | 1983 இன் 12 ஆம் இலக்க மிகை ஊதிய கொடுப்பனவு அதிகாரச் சட்டத்தின் 6(2)(அ) | மாதாந்த சம்பளம் பெறும் உத்தியோகத்தர் ஒருவர் அவரால் இறுதியாக பெற்றுக்கொள்ளப்பட்ட மாதாந்த சம்பளத்தின் அறவிற்கமைய கணிப்பிடப்பட்ட மாதாந்த சம்பளத்தின் ஒரு பகுதி மிகை ஊதியமாக செலுத்தப்பட வேண்டிய போதிலும் 2005 ஆம் | இ.போ.ச. இனால் பல்வேறு காலங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைய பணிக்கொடை கொடுப்பனவு தொடர்பிலான சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதற்கமைய 2005.10.18 | அதிகார சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக மேற்கொள்ளப்பட்ட தவறுதலான கொடுப்பனவுகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
| --- | --- | --- | --- | --- |
| | | ஆண்டிற்கு முன்னர் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட ஊழியர்களுக்காக மிகை ஊதியம் செலுத்தும் போது அவரால் இறுதியாக ஈட்டப்பட்ட முழுமையான சம்பளத்தினை ஆண்டுகளின் எண்ணிக்கையால் பெருக்கி மிகை ஊதியம் செலுத்தப்பட்டிருந்ததுடன் மிகை ஊதியம் செலுத்தும் போது ஊழியரால் இறுதித் திகதியில் ஈட்டிய மாதாந்த சம்பளம் சேவையாற்றிய வருடங்களின் எண்ணிக்கையால் பெருக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்ட காரணத்தால் மீளாய்வாண்டினுள் ரூபாய்.319,689,152 ஆன தொகை மிகை ஊதியமாக கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | ஆம் திகதிக்கு முன்னர் இணைத்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுக்கக மாதாந்த சம்பளத்தை அடிப்படையாகக் கொண்ட பணிக்கொடை கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டதுடன் எதிர்காலத்திற்கு தாக்கம் அளிக்கும் வகையில் சுற்றறிக்கை வெளியிடப்பட முடியாது என தொழில் ஆணையாளரினால் 2020.01.07 மற்றும் 2021.02.09 ஆம் திகதிய கடிதங்களில் வழங்கப்பட்டுள்ள தெளிவுபடுத்தலுக்கு அமைய பணிக்கொடை கொடுப்பனவு நடைமுறை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. | |
| (இ) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாண கோவை | | | |
| i. | நிதிப்பிரமாணம் 105 | ரூபாய்.1,041,195 கிரயமான சேதத்திற்கு உள்ளான மோட்டார் வாகனங்கள் தொடர்பில் மற்றும் 2022 மே 09 ஆம் திகதி இடம் பெற்ற கலவரங்களின் போது சேதத்திற்குள்ளாகிய பேருந்துகள் மற்றும் வாகனங்களின் பெறுமதியான ரூபாய்.12,136,724 ஆன தொகை தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆரம்ப அறிக்கை ஒன்று அல்லது முழுமையான அறிக்கை ஒன்று காணப்படாத காரணத்தால் பாதுகாப்பு பிரிவிலிருந்து கிடைத்துள்ள ஆரம்ப விசாரணை அறிக்கையின் பெறுமதிகளை உறுதிப்படுத்திக் கொள்ளலல், பொறுப்பு கூற வேண்டியவர்களை இனம் காணுதல் மற்றும் உரிய வாகனங்களில் கடமை பயணங்களின் தன்மை, | நட்டம் தொடர்பில் பொறுப்பு கூற வேண்டியவர்களை உரிய முறையில் இனம் கண்டு அல்லது நட்டத்தினை மீளளிப்பு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | காப்புறுதி கம்பனியினால் பெற்றுக் கொள்ளக் கூடிய நட்ட மீளளிப்பு பெறுமதி, பழுதுபார்த்தல்களுக்கான செலவினை மதிப்பீடுகள் போன்ற விடயங்களை நிறைவு செய்யாது நி.பி.105 இன் பிரகாரம் செய்யப்படுவதில் தடை ஒன்று ஏற்பட்டுள்ளது. | |
| ii. | நிதிப்பிரமாணம் 225 | அனைத்து கொடுப்பனவுகளுக்கும் தேவையான உறுதி சீட்டுக்கள் உரிய மாதிரி படிவங்களில் சரியாகவும் முழுமையாகவும் நிரப்பப்பட்டு கொடுப்பனவுகளு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும் 2022 ஜூலை மாதம் 07 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை உதிரி பாகங்கள் மற்றும் எரிபொருள் கொள்வனவுக்காக மட்டக்குளி டிப்போவின் மூலம் 14 காசோலைகளுக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபாய்.25,588,202 ஆன தொகைக்காக சான்றுபடுத்தல்களுக்கு உரிய கொடுப்பனவு உறுதி சீட்டுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கொடுப்பனவு உறுதி சீட்டுகளை உரிய முறையில் உரிய கோவையில் உள்ளடங்கியுள்ளது. 2023.05.31 இற்கு முன்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட உதவி முகாமையாளர் (நிதி) இற்கு எழுத்து மூலம் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்க கொடுப்பனவு உறுதி சீட்டுகளை தயாரித்து உரிய கட்டமைப்பில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| iii. | நிதிப்பிரமாணம் 387 | எந்தவொரு அரச வங்கியிலும் வங்கி மேலதிகப்பற்றினை பெற்றுக்கொள்ளுதல் தடை செய்யப்பட்டுள்ள போதிலும் சபையினால் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக ரூபாய்.645,939,849 தொகையான வங்கி மேலதிக பற்றொன்று பேணிச் செல்லப்பட்டிருந்ததுடன் அதற்கான வங்கி மேலதிக பற்று வட்டியாக மீளாய்வாண்டில் ரூபாய்.400,171 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. | கொடுப்பனவு உறுதி சீட்டுகளை உரிய முறையில் உரிய கோவையில் உள்ளடங்கியுள்ளது. 2023.05.31 இற்கு முன்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்குமாறு உதவி முகாமையாளர் (நிதி) இற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்க கொடுப்பனவு உறுதி சீட்டுகளை தயாரித்து உரிய கட்டமைப்பில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| iv. | நிதிப்பிரமாணம் 395(இ) | வங்கி கணக்கு ஒன்று உள்ள எந்த நிறுவனத்தினாலும் ஒவ்வொரு மாதத்தின் | 2020 ஆம் ஆண்டு முதல் இ.போ.ச. இல் இயங்கும் அனைத்து | டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இறுதியிலும் மேற்கொள்ளப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் அதற்கடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் வங்கி இணக்க கூற்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 03 பிரதேச அலுவலகங்கள் மற்றும் 03 டிப்போக்களின் மக்கள் வங்கியினதும் இலங்கை வங்கிகளும் பேணிச்செல்லப்பட்டிருந்த 07 கணக்குகளுக்குரிய வங்கி இணக்கக்கூற்றுக்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்கீட்டு அலகுகளுக்கும் வங்கி இணக்க கூற்றுக்களை தயாரிக்கும் பணிகள் Accpack மென்பொருளின் ஊடாக தயாரிக்கப்படுவதுடன் ஒவ்வொரு வங்கி இணக்க கூற்றும் அதற்கடுத்த மாதத்தின் 10 ஆம் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்படும். | வங்கி இணக்கக் கூற்றினை சரியாக தயாரித்து இறுதி கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| v. | நிதிப்பிரமாணம் 395(ஈ) | 2022 டிசம்பர் மாதம் தயாரிக்கப்பட்ட வங்கி இணக்க கூற்றுக்கமைய வழங்கப்பட்ட போதிலும் கொடுப்பனவுகளுக்கு சமர்ப்பிக்கப்படாத ரூபாய்.57,942,422 ஆன தொகைக்கு உரியதாக 12 டிப்போக்களில் காசு செலுத்தப்படாத காசோலைகள் தொடர்பிலான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | குறித்த வழு இடம் பெற்றுள்ளது என்பதனை ஏற்றுக்கொள்கின்றேன். | குறித்த காசோலை பெறுமதியினை வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| vi. | நிதிப்பிரமாணம் 396(அ)(i) மற்றும்(iii) | ரூபாய்.5,407,762 பெறுமதியான பின்வரும் டிப்போக்களுக்காக நிறுவனங்களில் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட 163 காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த வழு இடம் பெற்றுள்ளது என்பதை ஏற்றுக் கொள்கின்றேன். | நிதிப்பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு அமைய காசோலைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவை | | | |
| i. | XXV ஆம் அத்தியாயத்தின் 5.2 மற்றும் 5.3 ஆம் பிரிவு | தொழிற்சங்க நடவடிக்கைகளுக்காக விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரின் சம்பளம் மற்றும் வாழ்க்கை செலவினப்படி அரசினால் செலுத்தப்படுவதுடன் அவர் | கணக்காய்வு அவதானிப்புகளுடன் இணங்கிய போதிலும் இலங்கை போக்குவரத்து சபை திணைக்களம் ஒன்று அல்ல என்பதுடன் | தவறுதலாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளை அறவிடுவதற்கு அல்லது மீளளிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அரச சேவை நலன்புரி நிதியத்திற்கு பங்களிப்பு செய்பவர் எனின் அரசின் பங்களிப்பு தொகையானது சங்கத்தினால் அரச சேவைகள் நலன்புரி நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டும். எனினும் அந்தத் தொகை தொழிற்சங்கத்தினால் அல்லாது சபையினால் செலுத்தப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறான உத்தியோகத்தர் ஒருவருக்கு சம்பளம் மற்றும் படிகளுக்கு மேலதிகமாக சேவைக்காக ஏனைய எந்தவொரு உரித்தும் இல்லை என்ற போதிலும் 2022 டிசம்பர் மாதம் வரையிலும் 07 தொழிற்சார் சங்கங்களின் 28 உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்பு படிகள் மற்றும் மிகை ஊதியங்களாக முறையே ரூபாய்.1,053,100 மற்றும் ரூபாய்.10,661,547 எனுமாறு ரூபாய்.11,714,647 கூட்டுத்தொகையான பணம் செலுத்தப்பட்டிருந்தது. | பகுதி அளவு அரச நிறுவனம் ஒன்றாகும். அதனால் தபனட விதி கோவையின் ஏற்பாடுகளை முழுமையாக செயல்படுத்துவது இல்லை. | வேண்டும். |
| ii. | XXV அத்தியாயத்தின் 4.2 ஆம் பிரிவு | மேற்படி பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக சபையின் 05 தொழிசார் சங்கங்களுக்காக கூடுதலாக 12 உத்தியோகத்தர்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்காக விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அகில இலங்கை ஐக்கிய மோட்டார் தொழிலாளர் சங்கத்தின் அங்கத்தவர் ஒருவருக்கு 2006 ஆம் ஆண்டு முதல் சம்பளம் மற்றும் மிகை ஊதியமாக ரூபாய்.3,190,410 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த சங்கத்திலேயே மற்றும் ஒரு உத்தியோகத்தரும் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அவருக்கும் சம்பளம் மற்றும் மிகை ஊதியமாக ரூபாய்.772,938 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. | இரண்டு உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் அல்லாது விடுவிக்கப்பட்டுள்ள 34 பேருக்கும் விடுவிக்கப்பட்ட காலத்தினுள் சபையின் சம்பிரதாயங்களை பின்பற்றி இம்முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு விடுவிக்கும் நடைமுறை முறையற்றது என்பதனை மற்றும் அதனை அகற்றுவதற்கு தற்போது தயாரிக்கப்பட்டவாறு உள்ள சபையின் கட்டுப்பாட்டு ஒழுங்கு முறைகளை திருத்தம் மேற்கொள்ளும் போது உரிய நடவடிக்கை | சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் உள்ளடங்கலாக விடுவிக்கப்பட்டடுள்ள அனைவருக்கும் முரணாக செலுத்தப்பட்டுள்ள கொடுப்பனவினை அறவிடுவதற்கு அல்லது மீளளிப்பு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | எடுக்கப்பட உள்ளது. | |
| iii. | XXV அத்தியாயத்தின் 6.1 ஆம் பிரிவு | செய்வதற்கு உரித்து காணப்படுவது இலவச புகையிரத பயணச்சீட்டு மற்றும் மத்திய போக்குவரத்துச் சபையின் இலவச பயணச் சீட்டின் ஊடாக மாத்திரம் ஆகும். அவ்வாறான போதிலும் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக சபையினால் ஒதுக்கப்பட்டிருந்த 03 வாகனங்களுக்கு மற்றும் 03 தனிப்பட்ட வாகனங்களுக்கு 2022 ஆம் ஆண்டில் எரிபொருள் மற்றும் பழுதுபார்த்தல் செலவினமாக சபையின் பணத்திலிருந்து ரூபாய்.4,782,305 ஆன தொகை செலவிடப்பட்டிருந்தது. | பழுது பார்த்தல் நடவடிக்கைகளுக்காக 03 வாகனங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட செலவினம் சரியாவதுடன் அவற்றுள் 02 வாகனங்கள் மாத்திரம் தொழிற்சார் சங்க பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்கின்றேன். அந்த பிரதிநிதிகள் மற்றும் தனியார் வாகனங்களை பயன்படுத்தும் தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கு மாதாந்தம் 115 லிட்டர் எரிபொருள் படி வழங்குவதற்கு இ.போ.ச அதிகாரிகளினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக் கொள்கின்றேன். | தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்களை மீள பெற்றுக் கொண்டு கடமைகளின் தேவைப்பாடுகளுக்கு பயன்படுத்த வேண்டும். |
| (உ) | 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | கடமைகளுக்காக சேவைக்கு வருகை தரும் உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச்செல்லல்களை உறுதிப்படுத்துவதற்கு கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட வேண்டியதுடன் தமது கடமைகளுக்கு மேலதிகமாக அழைப்பு கடமைகள் போன்ற திட்டவட்டமான பணிகளுக்காக அலுவலகத்திற்கு வருகை தரும் உத்தியோகத்தர்களும் அவர்களின் வருகையை கைவிரல் அடையாள இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்த வேண்டும். எனினும் தலைமை அலுவலகம், பிரதேச அலுவலகங்கள் மற்றும் டிப்போக்களின் 2019 ஆம் ஆண்டு முதல் வருகை மற்றும் வெளிச்செல்லல் பதிவு | வயரிங் கட்டமைப்பு முழுமையாக செயல் இழக்கும் கட்டத்தில் காணப்பட்டதுடன் வயரிங் கட்டமைப்பினை பழுது பார்ப்பதற்கு ரூபாய்.369,600 ஆன மதிப்பீடு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது. இதுவரையிலும் இ.போ.ச இற்கு புதிதாக 250 புதிய இயந்திரங்களை கொள்வனவு செய்ய பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஊழியர்களின் வருகைகளை போன்றே மேலதிக நேரம் கொடுப்பனவுக்கான காலத்தினை கணிப்பீடு | வருகை மற்றும் வெளிச்செல்லல் கைவிரல் அடையாள இயந்திரத்தின் பயன்பாட்டின் மூலம் பதிவு செய்யப்பட வேண்டியதுடன் மேலதிக நேரத்தினை உறுதிப்படுத்துவதற்கு கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செய்வதற்கு கைவிரல் அடையாள இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதனால் மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தின சம்பளங்களை செலுத்தியமை தொடர்பிலான சரியான தன்மை தொடர்பில் கணக்காய்வில் திருப்தி கொள்ள முடியாதிருந்தது. மேலும் தலைமை அலுவலகத்தில் உள்ள கைவிரல் அடையாள இயந்திரத்தினை பழுது பார்ப்பதற்காக 2022 ஆம் ஆண்டில் ரூபாய்.369,600 ஆன தொகையை செலவிடப்பட்டுள்ள போதிலும் அவற்றை தொடர்ந்தும் செயற்படு நிலைமையை உள்ளாக்கி இருக்காமை அவதானிக்கப்பட்டது. | செய்வதை திருத்துவதற்கு உள்ள இயலுமை தொடர்பில் பிரச்சனை உருவாகி உள்ளது என்பதனை ஏற்றுக்கொள்கின்றேன். | |
| (ஊ) | பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் PED 1/2015 | மேற்படி சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ள அட்டவணையில் நாலாம் பிரிவிற்கு இணங்க 2006 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை இலக்கமும் MSD 30 இன் பிரகாரம் HM 1-1 தொகுதியில் அல்லது அதற்கு உயர்வாக அத்திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி ஒன்றினை வகிக்கும் எந்தவொரு உத்தியோகத்தரும் தற்போதைய திருத்தத்திற்கு அமைய உத்தியோகபூர்வ வாகனத்தை பயன்படுத்துவதற்கு உரித்துள்ள எரிபொருளின் அளவானது 115 லிட்டர்கள் ஆன போதிலும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள டிப்போக்களின் டிப்போ அதிகாரிகள் உள்ளடங்களாக உத்தியோகத்தர்கள் பயன்படுத்தும் வாகனங்களுக்கு | உத்தியோகத்தர்களின் கடமை பயணங்களுக்காக வழங்கப்படும் எரிபொருளின் அளவு தொடர்பிலும் அவர்கள் பயணம் செய்த விதம் தொடர்பிலும் தகவல்களை பெற்றுக்கொண்டு கடமைகளுக்கு எரிபொருள் பயன்படுத்தப்பட்டதா என்பதனை ஆராய்ந்து முறையான அறிக்கையினை பெற்றுக் கொண்டதன் பின்னர் கடமைகளுக்கு புறம்பான நடவடிக்கைகளுக்கு எரிபொருள் பெற்றுக்கொள்ளப்பட்டிருப்பின் அதனை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | கூடுதலாக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள எரிபொருள்களுக்கு உரிய கிரயத்தினை உரிய தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 2022 ஆம் ஆண்டு முதல் குறித்து எல்லையினை விஞ்சி எரிபொருள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக செலவிடப்பட்டிருந்த தொகை ரூபாய்.2,747,405 ஆகும். | | |
| (எ) | 1997 செப்டம்பர் 29 ஆம் திகதிய 15/97 ஆம் இலக்க நிர்வாக சுற்றறிக்கை | தொழிற்சங்கங்களின் நடவடிக்கைகளுக்காக முழுமையாக விடுவிக்கப்பட்டுள்ள ஊழியர்கள் 04 வருட காலத்தின் பின்னர் மீண்டும் முழுமையாக விடுவிக்கப்பட்டால் அதற்காக மாண்புமிகு அமைச்சரின் பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் 06 தொழிற்சங்கங்களுக்கு 04 வருடங்களை விஞ்சி 13 உத்தியோகத்தர்கள் தொடர்ந்தும் அந்த சட்டத்திற்கு முரணாக முழு நேர அடிப்படையில் விடுவிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | தற்போது சபையின் கட்டுப்பாட்டு நடைமுறைகள் 100% சதவீதம் தாபன விதி கோவைக்கு இணங்க நடைமுறைப்படுத்தப்படாததுடன் தொழிற்சங்கத்தின் 13 பேர் 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தொழிற்சங்க நடவடிக்கைகளுக்காக விடுவிக்கப்பட்டிருந்த காரணத்தால் தாபன விதி கோவைக்கு முரணான போதிலும் சபையின் நடைமுறைகளுக்கு அமைய அது தொடர்பில் ஆலோசனை ஒன்று பெற்றுக் கொண்டிராமையால் அவர்கள் தொடர்ந்தும் அவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளனர். | முறையற்ற ரீதியில் இடம் பெற்றுள்ள விடுவிப்புகளை நிறுத்தி தற்போது தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ள ஊழியர்களை கடமைகளில் இணைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | 2006 செப்டம்பர் 22 ஆம் திகதிய முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 30/2006 | இலங்கை போக்குவரத்து சபை ஆரம்ப, இடைநிலை மற்றும் உயர் முகாமைத்துவம் ஆகியவற்றில் சேவையாற்றும் I தரத்திலிருந்து VIII தரம் வரையான உத்தியோகத்தர்களின் சம்பளம் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 2/2016 சுற்றறிக்கையின் சம்பளத் தொகுதிக்கு அமைய 2018.01.01 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் திருத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள போதிலும் 2022 டிசம்பர் 31 ஆம் திகதி | இலங்கை போக்குவரத்து சபையின் I தரத்திலிருந்து VIII தரம் வரையிலான தொகுதிகளுக்கு உரிய ஊழியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு அந்த சுற்றறிக்கைக்கமைய சம்பள முறைமை அங்கீகரிக்கப்படவில்லை. எவ்வாறான போதிலும் 2022.09.28 ஆம் திகதிய முகாமைத்துவ | சம்பளமானது சரியாகவும் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்கவும் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| வரையிலும் I தரம் முதல் VIII தரம் வரையான 3,050 உத்தியோகத்தர்களின் சம்பளங்கள் குறித்த படிமுறையில் வைக்கப்பட்டு திருத்தப்பட்டிராத காரணத்தால் சம்பளம் மற்றும் படிகளாக செலுத்தப்பட்ட ரூபாய்.1,077,109,440 ஆன தொகையின் சரியான தன்மையை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | சேவைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கமைய 2023 மார்ச் மாதம் முதல் சம்பளம் தயாரிக்கப்படுவதுடன் சம்பளம் செலுத்தும் போது கூடுதலான கொடுப்பனவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருப்பின் அதனை உரிய உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடுவதற்கு அல்லது சம்பளம் மற்றும் படிகளை குறைத்து செலுத்தி இருப்பின் குறித்த நிலுவை சம்பளம் மற்றும் படிகளை செலுத்துவதற்கு இயலுமான வகையில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. | |

## 1.9 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான 36 டிப்போக்களில் காணப்பட்ட ரூபாய்.23,348,867 தொகையான வரவுமீதி மற்றும் ரூபாய்.165,336,690 தொகையான வங்கி மேலதிக பற்று மீதியுடனான 40 நடைமுறை கணக்குகளுக்காக வங்கிக் கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் அந்த நடைமுறை கணக்குகளுக்கு உரியதாக தயாரிக்கப்பட்டிருந்த வங்கி இணக்க கூற்றுக்களின் சரியான தன்மை தொடர்பில் கணக்காய்வில் திருப்தி கொள்ள முடியாதிருந்தது. | முழுமையான நிதியாண்டுக்காக வங்கி கூற்றுகள் கணக்கிட்டு பதிவுகள் மற்றும் ஏனைய ஆவணங்களுடன் பெற்றுத் தருமாறு அனைத்து டிப்போக்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த 36 டிப்போக்களின் கணக்காளர்களினால் அந்த அறிவுரை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | கணக்குகளை சமர்ப்பிக்கும் போது கணக்கு பதிவுகளுடன் நிதிக் கூற்றுக்களும் வங்கி இணக்க கூற்றுக்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கின்தொட்ட பெட்டிகலவத்த பிரதேசத்தின் வேலைத்தளத்தில் மக்கள் வங்கியின் பேணிச் செல்லப்படும் நடைமுறை கணக்கிற்குரிய ரூபாய்.10,889,598 ஆன மீதி வைப்புச் செய்யப்பட்ட போதிலும் அகற்றப்படாத மீதி ஒன்று மற்றும் ரூபாய்.11,419,020 தொகையான வழங்கப்பட்ட போதிலும் கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்படாத மீதி ஒன்றும் காணப்பட்டதுடன் அம்மீதிகள் 2021 ஆம் ஆண்டு முதல் முன் கொண்டு வரப்படுவதுடன் அந்த பெறுமதிகளை இனங்கண்டு திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஜின்தொட்ட, பெட்டிகலவத்த பிரதேச வேலைத்தளங்களினால் நடாத்திச் செல்லப்படும் 14515–9–1002–013 ஆம் இலக்க நடைமுறை கணக்கில் கணக்கு வைத்தல் கணினி மென்பொருளின் ஊடாக மேற்கொள்ளும் போது உரிய கணக்காளாரினால் எஞ்சிய நடவடிக்கைகளை குறிப்பிட்டு பேரேட்டிற்கு உட்படுத்தப்பட்டு (Posting) மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அந்த தவறினை திருத்துவதற்கு உரிய திகதி ஆரம்பிக்கும் வரையில் இருக்க வேண்டும். | வழங்கப்படாத காசோலைகளை வருமானத்திற்கு எடுப்பதற்கும் வைப்புச் செய்யப்படாத மீதிகள் தொடர்பில் துரிதமாக பரிசீலிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான இரத்மலானை மற்றும் ஒறுகொடவத்த எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இரண்டினதும் நடைமுறை கணக்குகளின் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ள படியாக ரூபாய்.5,737,177 மற்றும் ரூபாய்.42,547,041 தொகையான வரவு மீதிகள் காணப்பட்டு போதிலும் அக்கணக்குகளுக்கு உரிய 2022 ஆம் ஆண்டிற்கான எந்த தகவலும் கணக்காய்க்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்வாறே 2018 ஆம் ஆண்டு முதல் எந்த செயற்பாட்டு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாத ஒறுகொடவத்த எரிபொருள் நிரப்பு நிலையத்தினால் இலங்கை வங்கியில் பேணிச் செல்லப்படும் நடைமுறை கணக்கில் ரூபாய்.42 மில்லியனுக்கு | உரிய வழு இடம்பெற்றுள்ளது என்பதை ஏற்றுக் கொள்கின்றேன். | உரிய முறையில் நடைமுறை கணக்குகளில் காசு மீதியினை பேணிச் செல்வதன் மூலம் முதலீடுகளின் மூலம் பெற்றுக்கொள்ள கூடிய நலன்களை இழக்காதிருப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| மேற்பட்ட தொகை எந்த வட்டி வருமானத்தையும் பெற்றுக் கொள்ளாது நடைமுறை கணக்கினுள் பேணிச் செல்லப்பட்ட காரணத்தால் சபைக்கு பெற்றுக் கொள்ளக் கூடியதாக காணப்பட்ட வட்டி வருமானம் இழக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |

## 1.10 தகவல் தொழில்நுட்ப (IT) பொதுக் கட்டுப்பாட்டு முறைமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முற்கொடுப்பனவு அட்டைகளை பயன்படுத்துதல் தொடர்பிலான தொழில்நுட்ப கட்டங்களின் இரண்டாவது கட்டம் அதாவது Back End (பணக்கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் பிரவேசம் மற்றும் இணைக்கும் கட்டமைப்பு) அறிமுகப்படுத்துவதற்காக 2022 ஆம் ஆண்டிற்காக ரூபாய்.250 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் சபையினால் போக்குவரத்துச் சபையின் தேவைக்கேற்ப தொழில்நுட்ப அமைப்பு குறிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு உரிய முறையில் விகைக்கேள்வி கோரப்பட்டு அதற்காக வழங்குநர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டிராததுடன் போக்குவரத்து ஆணைக்குழுவினால் விலை கேள்வி கோரப்பட்டு தேர்வு செய்யப்பட்ட வழங்குநர் ஒருவருடன் 2021 ஜூன் 29 ஆம் திகதி ஒப்பந்தத்திற்காக கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதற்கமைய முழு ஒப்பந்த பெறுமதியானது ரூபாய்.3,900,000 ஆகும். எனினும் அந்தத் தொகையில் ரூபாய்.1,500,000 கட்டமைப்பினை கொள்வனவு செய்தல் மற்றும் ஒரு வருட உத்தரவாத காலத்தின் பின்னர் அதற்கடுத்த வருடத்திற்கு ரூபாய்.800,000 படியாக 03 சேவை | தேசிய முற்கொடுப்பனவு அட்டைகள் ஒட்டுமொத்த செயல்திட்டத்திற்காக 2022 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ரூபாய்.250 மில்லியன் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அது புதிய இலத்திரனியல் டிக்கெட் இயந்திரங்கள் 3,500 இனை கொள்வனவு செய்வதற்கு உரிய செயல்திட்டத்திற்காக தேவையான தொழில்நுட்ப பணிகளுக்கு அவசியமான Server வசதிகள் மற்றும் தொடர்பாடல் வசதிகளுக்கானது ஆகும். இங்கு குறிப்பிடப்பட்டுள்ளவாறு Back End மென்பொருள் கட்டமைப்பு இ.போ.ச இல் மேற்கொள்ளப்பட்ட பெறுகையொன்று அல்லாத தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பெறுகையில் தெரிவு செய்யப்பட்டு வழங்குநர் ஊடாக இ.போ.ச பணிப்பாளர் சபைக்கு அங்கீகாரத்துடன் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது . அந்த Back End கட்டமைப்பின் பெறுமதியானது ரூபாய்.39 | சரியான சாத்தியவள கற்கை ஒன்றினை மேற்கொண்டு அசயல் திட்டத்தினை திட்டமிட்டு அதற்கமைய உரிய வழங்குனரை தெரிவு செய்து செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். |

உடன்படிக்கைக்கு உள்ளாவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் செயற்திட்டம் நிறைவு செய்வதற்கு முன்னர் மென்பொருள் செயற்திட்டத்தின் தொகையான ரூபாய்.1,500,000 இற்கான கொள்வனவு கட்டளை ஒன்று வழங்கப்பட்டு அந்தத் தொகை 2022 ஆம் ஆண்டில் ஒதுக்கமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும் இந்த செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான இலத்திரனியல் டிக்கெட் இயந்திரத்தினை கொள்வனவு செய்வதற்கு போதிய நிதி ஏற்பாடு காணப்படாமை, பயன்படுத்தப்பட்ட அட்டைகளை நிலவும் நடைமுறை சிக்கல்கள் மற்றும் செயற்திட்டத்தில் உருவாகிய தொழில்நுட்ப சிக்கல்களின் அடிப்படையில் இந்த மென்பொருள் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு பெற்றுக்கொள்வதில் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

இலட்சம் ஆவதுடன் அதன் அடிப்படை கொடுப்பனவாக ரூபாய்.1.5 மில்லியன் அந்த நிறுவனத்திற்கு கூறுவிலைகள் கோரப்பட்டுள்ளன. இந்த உடன்படிக்கை கைச்சாத்திட்ட ரூபாய்.1.5 மில்லியனுக்கு உரிய நிறுவனமான Silver Leap நிறுவனத்திற்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்படவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 484,563,354 ஆன இலாபமாக காணப்பட்டதுடன், அதனோடு ஒத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 3,059,980,180 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 3,544,543,534 தொகையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு பேருந்து கட்டணம் இருநூறு சதவீதத்தினால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான மீளாய்வு

மீளாய்வாண்டிக் பிரதான வருமான மற்றும் செலவின விடயங்கள் கடந்த வருடத்துடன் ஒப்பிடப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு அதிகரிப்புகள் மற்றும் குறைவுகளின் சதவீதங்கள் பின்வருமாறு.

| **வருமானம்/செலவினம்** | **ஆண்டு (2022) (ரூபா மில்.)** | **ஆண்டு (2021) (ரூபா. மில்.)** | **அதிகரிப்பின் சதவீதம் (%)** |
|---|---|---|---|
| நேர் வழி பதிவேட்டு வருமானம் | 54,957 | 13,608 | 304 |
| ஏனைய வீதிப் பதிவேட்டு வருமானம் | 11,393 | 7,169 | 59 |
| பேருந்து செயற்பாட்டு செலவினம் | 18,060 | 13,049 | 38 |

| | | | |
|---|---|---|---|
| எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி எண்ணெய் | 37,344 | 8,026 | 365 |
| ஏனைய கிரயங்கள் | 6,790 | 2,775 | 145 |

2.2.1 மீளாய்வாண்டின் வீதி பதிவேட்டு வருமானம் 304 சதவீதத்தினால் அதிகரித்துள்ளமை அவதானிக்கப்பட்டது. இந்த வருமானத்தின் அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கம் அளித்துள்ள காரணியாவது பேருந்து கட்டணங்கள் சுமார் இருநூறு சதவீதத்தினால் அதிகரித்துள்ளமை என்பது அவதானிக்கப்பட்டது. ஏனைய வருமானங்களுக்கு ஒப்பாக பாரிய அளவில் அதிகரிக்காத 59 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இதற்கு பிரதானமான காரணமாக போக்குவரத்து கட்டணம் அதிகரித்தமையின் ஊடாக நிவாரண அடிப்படையில் இலங்கை போக்குவரத்து சபையினால் வசதிகளை பெற்றுக்கொள்ளும் நபர்களின் அளவினை அதிகரிக்கின்றமை தொடர்ந்தும் அவதானிக்கப்பட்டது.

2.2.2 பேருந்து செயற்பாட்டு செலவினத்திற்கு ஒப்பாக 38 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் இதற்கு பிரதானமாக பேருந்து செயல்பாட்டு செயற்திறன் அற்றிருத்தல் மற்றும் நிர்வாகிகள் இல்லாது மேலதிக நேரங்கள் வழங்கப்பட்டிருந்தமை மற்றும் ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தமை என்பது அவதானிக்கப்பட்டது.

2.2.3 எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி எண்ணெய் செலவினம் 365 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கு பிரதானமான காரணமாக அமைந்த அதாவது எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி எண்ணெய்களின் விலை அசாதாரணமான முறையில் அதிகரித்தமையும் முறையான உள்ளக கட்டுப்பாட்டுடன் எரிபொருள் பகிர்ந்தளிப்பு இடம்பெறாமையும் என்பது அவதானிக்கப்பட்டது.

2.2.4 ஏனைய நேரடி கிரயங்கள் 145 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் அதற்கு பிரதானமான காரணமானது டொலரின் பெறுமதிக்கு ஒப்பாக உதிரிப்பாகங்களின் விலை அதிகரித்தமை மற்றும் முறையான கட்டுப்பாட்டின்றி உதிரி பாகங்களை கொள்வனவு செய்தமை என்பது அவதானிக்கப்பட்டது.

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் மற்றும் முன்னைய ஆண்டின் சபையின் கணக்கு அறிக்கைகளின் தரவுகளுக்கமைய பிரதான விகிதங்களின் விபரங்கள் பின்வருமாறு.

| விகிதம் | 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிறைவடைந்த ஆண்டுக்கான இறுதி அறிக்கை | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டு |
|---|---|---|
| மொத்த இலாப விகிதம் | 0.73% | (14.7%) |
| தேறிய இலாப விகிதம் (மானியங்கள் மற்றும் நிவாரணங்களுக்கு முன்னர்) | (0.24%) | (20.56%) |
| நடைமுறை சொத்துக்கள் விகிதம் | 1.34:1 | 1.06:1 |
| விரைவு சொத்துக்கள் விகிதம் | 1.03:1 | 0.77:1 |

2.3.1 கடந்த வருடத்திற்கு ஒப்பாக தேறிய இலாப வீதத்தின் அதிகரிப்பு காண்பிக்கப்பட்ட போதிலும் அது போதுமானதாக காணப்படாத காரணத்தால் கொடுக்கல் வாங்கல்களின் வெளிப்படை தன்மையொன்று இல்லாதிருந்தமை மற்றும் முகாமைத்துவத்தின் பொறுப்பு கூறல் தொடர்பில் பிரச்சனைக்குரியதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் தேறிய இலாப வீதம் நேர் பெறுமதி ஒன்றினை கொண்டிருந்தமை தவறாக மூலதன செலவினத்திற்கான திறைசேரியினால் கிடைக்கப்பெற்ற ரூபாய்.606.31 மில்லியன் பெறுமதி மானியங்கள் மற்றும் நிவாரணங்களின் கீழ் கணக்கு வைக்கபட்டமையே என்பது அவதானிக்கப்பட்டது.

2.3.2 நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் உயர்வான மட்டத்தில் காணப்படாமை சபையின் குறுங்கால திரவத்தன்மை மற்றும் உரிய நேரத்தில் அதன் பொறுப்புக்களை நிறைவேற்றக்கூடிய இயலுமைக்கு தடையொன்றாக காணப்படுவதால் அது தொடர்பில் சபையினால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபையினால் மாகாண மட்டத்தில் 09 கழிவு புகைப்பரிசோதனை நிலையங்களை நிர்மாணிப்பதற்கு உரிய உபகரணத் தொகுதிகள் 2018 ஏப்ரல் 26 ஆம் திகதி மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் கழிவு புகை நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த துடன் அதற்காக அந்நிதியத்திலிருந்து ரூபாய்.22 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அந்த கழிவு புகை பரிசோதனை நிலையங்களுக்கு உரிய சிவில் பணி நிர்மாணங்களுக்காக ரூபாய்.89.84 மில்லியன் மதிப்பிடப்பட்ட தொகையில் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக ரூபாய்.27.96 மில்லியன் பணம் செலவிடப்பட்டிருந்தது. இந்த 09 கழிவுப் புகை பரிசோதனை நிலையங்களின் தளம் அஸ்பலட் இடப்பட்டு காபட் இடுவதற்காக 2018 ஆகஸ்ட் 16 ஆம் திகதி ரூபாய்.49.9 மில்லியனுக்கு மகநெகும வீதி நிர்மாண இயந்திர உபகரண கம்பனி மற்றும் போக்குவரத்துச்சபை உடன்படிக்கை கைசாதிடப்பட்டிருந்த போதிலும் அதற்காக செலவிடப்பட்ட தொகை கணக்காய்விற்கு | இச் செயற்திட்டத்தின் சாத்தியவள அறிக்கையினை தயாரிப்பது அவசியமற்றது என்பதற்கு காரணமாக அமைந்துள்ளது. 2016.03.09 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானம் ஆகும். இந்த செயல் திட்டம் முன்னெடுக்கப்படாமைக்கான காரணமானது இரு வழங்குனர்களால் எடுக்கப்பட்டிருந்த நீதிமன்ற நடவடிக்கைகள் இந்த செயல்திட்டத்தை முன்னெடுப்பதற்கு காரணமாக அமைந்துள்ளது என்பது தவறான கருத்தாகும். | இந்த கழிவு புகை பரிசோதனை நிலையம் செயலிழந்த நிலைக்கு உள்ளானமைக்கு நடவடிக்கை எடுத்த நபர்களை ஆராய்ந்து அவர்களிடம் இருந்து அந்த நட்டத்தினை அறவிடுவதற்கும் தொடர்புடைய தரப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் உரிய பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்படவில்லை. தற்போது இந்த கழிவு புகை பரிசோதனை நிலையம் செயல்படுத்தப்படாததுடன் கழிவு புகை நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினால் வழங்கப்பட்டிருந்த ரூபாய்.22 மில்லியன் பெறுமதியான உபகரணங்கள் துரப்பிடித்தவாறு காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. மேலும் இந்த கழிவுப் புகை பரிசோதனை நிலையத்திற்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்கள் ஏனைய பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் உபகரண தொகுதியுடன் வழங்கப்பட்ட கணினிகள் ஏனைய பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தன. அதற்கமைய செலவிடப்பட்ட ரூபாய்.49.96 மில்லியன் மற்றும் மேற்கொள்ளப்பட்ட ஏனைய செலவினங்களும் விலைவற்ற செலவினமாகி இருந்தன. | | |
| (ஆ) | பேருந்தின் ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு தேவையான டயர் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்வதற்கு அம்பாறையில் நிறுவப்பட்டுள்ள முற்பொருத்தக் கூடிய டயர் தொழிற்சாலை மூலம் வருடாந்தம் 14,400 முற்பொருத்தும் டயர்கள் மற்றும் ரூபாய்.7,861 எனும் டயர் ஒன்றின் மதிப்பிடப்பட்ட அலகு கிரயத்தில் உற்பத்தி செய்வதற்கு மீளாய்வாண்டில் திறைசேரி மற்றும் இலங்கை போக்குவரத்து சபை ரூபாய்.113.20 மில்லியன் நிதியினை ஒதுக்கீடு செய்திருந்த போதிலும் ரூபாய்.107.64 மில்லியன் | அம்பாறை டயர் தொழிற்சாலை மூலம் முற்பொருத்தும் டயர் உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதியினுள் சந்தையில் நிலவிய மூலப்பொருட்களின் விலையின் அடிப்படையில் டயர் ஒன்றின் விற்பனை விலை ரூபய்.7,861 என தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாட்டில் நிலவிய பண வீக்க நிலைமை காரணமாக அலகு கிரயம் அதிகரித்ததுடன் மதிப்பிடப்பட்ட உற்பத்தி டயர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்தமைக்கு அது காரணமாக அமைந்தது. அதனால் உற்பத்தி செலவினம் மற்றும் விற்பனை விலை ஆகியவற்றுக்கிடையே விலகலினை காணக்கூடியதாக | முற்பொருத்தம் டயர் சபைக்கு சொந்தமான தொழிற்சாலைகள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் வெளியே கொள்வனவு செய்வதற்கு செலவிடப்படும் கிரயத்தினை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| செலவிடப்பட்டு 8,997 டயர்கள் மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டிருந்ததுடன் உள்ளபடியான டயர் ஒன்றின் உற்பத்தி கிரயம் ரூபாய்.11,964 ஆனமையால் உற்பத்தி செய்யப்பட்ட டயர்களுக்காக மதிப்பிடப்பட்டு கிரயத்தினை விஞ்சி ரூபாய்.36,914,691 கூடுதலாக செலவிடப்பட்டிருந்தது. | காணப்பட்டது. | |

## 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மிகை ஊதிய அதிகார சட்டத்திற்கமைய சேவையிலிருந்து விலகிச் சென்ற ஊழியர்களுக்கு அவர்களுக்கு உரிய மிகை ஊதிய தொகை கணிப்பிடப்பட்டு அவர்கள் விலகிச் சென்ற திகதியிலிருந்து ஒரு மாதம் கடப்பதற்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும். எனினும் அவ்வாறு ஒரு மாதத்தினுள் உரிய முறையில் செலுத்தப்படாத காரணத்தால் மீளாய்வாண்டினுள் மிகை கட்டணமாக ரூபாய்.8,081,797 செலுத்தப்பட்டிருந்தது. | கோவைகள் காணாமல் போனவை போன்ற விடயங்கள் மற்றும் தொழிலாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையிலான எழுத்து மூல கட்டளைக்கமைய மற்றும் இணைப்புப்படிகள் மிகை ஊதியத்திற்கு எடுக்குமாறு தொழிலாளர் அலுவலகத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த கட்டளையின் அடிப்படையில் மிகை கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. | குறைபாடுகள் இடம்பெறாதிருக்க பணிக்கொடை நாளதுவரையாக்கப்பட்டு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) கட்டுபெத்த அதிசொகுசு சுற்றுலா போக்குவரத்து சேவைக்கு உரிய ரூபாய்.10,800,000 பெறுமதியான அதி சொகுசு பேருந்து ஒன்று அதிவேக பாதையில் விபத்திற்குள்ளாகி பழுது பார்க்கப்படாது ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்தது. அதற்காக முழுமையான காப்பீடு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் காப்புறுதி | குறித்த விபத்து நட்டம் காப்புறுதி நட்ட ஈட்டின் மூலம் மீளளிப்பு செய்வதற்கு அதன் முன்னால் முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்கவில்லை. இது தொடர்பில் உள்ளபடியான தகவல்களை வெளிப்படுத்துவதற்கு மீண்டும் புலனாய்வு ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது. | உரிய பொறுப்பு கூற வேண்டிய தரப்பினர்களிடமிருந்து அறவிடுவதற்கு அல்லது அவர்களுக்கு எதிராக ஒழுகாற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்டிருந்த காலத்தினுள் பேருந்தினை பழுது பார்ப்பதற்கு டிப்போ அதிகாரி தவறி இருந்தமையால் சேதத்தை மீளளிக்கும் காப்புறுதி கூட்டுத்தாபனத்தினால் நிராகரிக்கப்பட்டிருந்தது. | | |

## 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளபடியாக ரூபாய்.10 மில்லியனை விஞ்சிய 04 வங்கி நடைமுறை கணக்குகள் கணக்காய்விற்கு அவதானிக்கப்பட்டதுடன் எந்த வட்டி வருமானத்தினை பெற்றுக் கொள்ளாது நடைமுறை கணக்குகளில் ரூபாய்.624,588,024 பெறுமதி பேணிச்செல்லப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இந்த வங்கி கணக்குகள் தலைமை அலுவலகத்தின் சந்தை முதலீட்டுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளதுடன் வங்கி கணக்குகளின் திகதி இறுதியில் நிலவிய மீதி இரவு 12.00 இன் பின்னர் மேற்படி சந்தை முதலீட்டு கணக்கிற்கு மாற்றப்படுவதுடன் அதற்கடுத்த நாள் முற்பகல் 09.00 இற்கு மீண்டும் இ.போ.ச கணக்கிற்கு செலவு வைக்கப்படும். அதற்காக 15 சதவீத வருடாந்த வட்டி ஒன்று இ.போ.ச இற்கு வட்டி வருமானம் கிடைக்கப்பெறுகின்றமை குறிப்பிடுகின்றேன். | கிடைக்கும் வட்டி வருமானத்தை உரிய முறையில் இனம் கண்டு கணக்குகளில் தனித்தனியாக வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டில் ஓட்டத்தின் ஈடுபடுத்தப்பட்ட 446 கிலோமீட்டர்களுக்கு உரியதாக செலுத்தப்பட்டுள்ள மொத்த மேலதிகநேர செலவினம் ரூபாய்.283 மில்லியன் ஆவதுடன் அதற்கமைய 2018 ஆம் ஆண்டில் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட ஒரு கிலோமீட்டருக்கான மேலதிக நேர செலவினம் 60 சதவீதம் ஆகும். 2018 முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலும் சம்பளத்தின் பெறுமதியானது 100 சதவீதத்தினால் அதிகரித்த காரணத்தால் அதற்கமைவாக மேலதிகநேர | 2018/10/01 இற்கு முன்னர் இ.போ.ச இல் நடைமுறையில் இருந்த சம்பள முறைக்கு அமைய ஆரம்பத் தொகுதியிலான ஊழியர்களின் மேலதிக நேர வீதங்கள் ரூபாய்.95 க்கு அண்மியது ஆகும். எனினும் 2018/10/01 MSD/02/2016 இன் பிரகாரம் சம்பள பரிமாற்றத்துடன் அந்த தொகுதியில் ஊழியர்களின் மேலதிக நேர வீதம் ரூபாய்.175 ஆகும்.<br>அதற்கு அமைய மேலதிக நேர வீதம் இரு மடங்கினால் அதிகரித்தமையும் 2022 ஆம் ஆண்டளவில் அத்தொகுதியின் ஊழியர்களுக்கு 2019/01/01 | மேலதிக நேர கட்டுப்பாட்டிற்கு முறையான முறையான வேலை திட்டம் ஒன்று பின்பற்றப்பட வேண்டியதுடன் கட்டமைப்பினை நிறுவுவதன் மூலம் நேரங்களை குறித்து மற்றும் மேலதிக நேரத்தினை கணிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| செலவினம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட கிலோமீட்டர் ஒன்றிற்கு ரூபாய்.1.20 ஆக காணப்பட வேண்டியதுடன் அதற்கமைய 2022 ஆம் ஆண்டில் மேலதிகநேர செலவினம் ரூபாய்.566 மில்லியனை விஞ்சலாகாது. எனினும் 2022 ஆம் ஆண்டில் மேலதிக நேர செலவினம் ரூபாய்.3,074 மில்லியன் ஆனமையால் கூடுதலாக செலுத்தப்பட்டுள்ள மேலதிக நேர செலவினம் ரூபாய்.2,508 என்பது அவதானிக்கப்பட்டது. அதற்கமைய மேலதிக நேரம் கொடுப்பனவுகளின் வெளிப்படையற்ற தன்மை தொடர்பில் மேலதிகநேர கொடுப்பனவின் கட்டுப்பாடு தொடர்பில் முகாமைத்துவம் தமது பொறுப்பினை உரிய முறையில் நிறைவேற்றியிருக்கவில்லை என்பதும் கைவிரல் அடையாள இயந்திரம் செயலிழப்பதற்கு இடமளித்தமை மேலதிகநேர செலவினத்திற்கு நேரடியாக தாக்கம் அளித்துள்ளமை அவதானிக்கப்பட்டது. | சம்பள திருத்தம் மேற்கொள்ள அங்கீகாரம் கிடைத்தமையால் இந்த மேலதிக நேர வீதங்கள் ரூபாய்.200 இணை விஞ்சி இருந்தது. | |

**3.4 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வசதிகள் மற்றும் தரம் உயர்த்துதல் மூலம் கிரயத்தினை கட்டுப்படுத்துவதினை நோக்காக கொண்டு உயர் இயலளவு உடனான நவீன இயந்திர உபகரணங்களை கொண்டமைந்த டயர்களை பொருத்தும் தொழிற்சாலை ஒன்றினை நவீன மயப்படுத்துவதற்கு 2022 ஆம் ஆண்டினுள் ரூபாய்.50 மில்லியன் | 2022 ஆம் ஆண்டின் இதற்காக ரூபாய்.50 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் தேசிய போட்டி அடிப்படையிலான விலைகளின் கீழ் பத்திரிக்கை அறிவித்தல் ஒன்று பிரசுரிக்கப்பட்டதுடன் குறித்த விலைக்கோரல் இடம்பெற்றது. எனினும் அந்த பெறுகை நடைமுறையில் கூறுவிலைகளை சமர்ப்பித்த | தொழிற்சாலையின் இயல் அளவினை அதிகரித்து உற்பத்தியினை அதிகரிப்பதன் ஊடாக பாரிய கிரயம் மேற்கொண்டு கொள்வனவுகளை நிறுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ஒதுக்கப்பட்டிருந்ததுடன் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபாய்.69.4 மில்லியனாக காணப்பட்டது. அவற்றில் தற்போது காணப்படும் உற்பத்திக் கூடத்தின் இயலளவான 15,000 அலகுகள் வரை இருமடங்காக்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந்த தொழிலினை நிறைவேற்றாத காரணத்தால் மீளாய்வாண்டினுள் சபையின் 06 வலயங்களில் இருந்து மாத்திரம் ரூபாய்.786,866,930 பெறுமதியான பொருத்தக்கூடிய டயர்கள் 53,706 கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் தொழிற்சாலையின் உற்பத்தி இயலளவினை உச்ச அளவில் பயன்படுத்தி டயர்களை முற்பொருத்துவதற்கு இயலுமான போதிலும் குறித்த பிரதேச மற்றும் டிப்போக்களில் இருந்து முற்பொருத்துவதற்கு தேவையான டயர்கள் தொழிற்சாலைக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனங்களிடையே ஒரு நிறுவனத்தை தெரிவு செய்வதற்கு நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவினால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது இதற்கான புதிய பெறுகை நடவடிக்கை ஒன்றுக்கு செல்வது பொருத்தமானது என ஆகும். அதற்கான காரணமாக அவர்கள் அந்த நிறுவனங்களிடமிருந்து குறித்த இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கு முன்னர் பௌதீக பரிசோதனை ஒன்றுக்கு வழங்க முடியாது என்பதும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இயந்திரங்களை இறக்குமதி செய்து வழங்க முடியும் என்பதும் குறிப்பிடப்பட்டிருந்தது. |

(ஆ) 2022 ஆம் ஆண்டில் ஊழியர்களின் கடமை சுழற்சிக்கமைய வவுனியா டிப்போவின் மூலம் 53 வீதிகளில் ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த பேருந்துகளின் நாளாந்தம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பேருந்துகளின் எண்ணிக்கை 34 ஆகும். இதன் பெறுபேராக 19 வீதிகளில் சேவை முடக்கப்பட்டு இருந்தது. போதிய சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் காணப்பட்ட போதிலும் தேவையான அறவிலான பேருந்துகள் காணப்பட்டதுடன் நாளாந்தம் 34 பேருந்துகளை ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு தேவையான ஆக குறைந்த சாரதிகள் 48 பேர் மற்றும் 48 நடத்துனர்கள் காணப்பட வேண்டும் என தெரிவித்துக் கொள்கின்றேன். சாரதிகள் / நடத்துனர்களின் பற்றாக்குறையால் தற்போது 34 பேருந்துகள் அல்லது 33 பேருந்துகள் மாத்திரமே ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படுகின்றது. கிடைக்கும் ஊழியர்களின் எண்ணிக்கையில் ஏதேனும் பேருந்துக்களின் எண்ணிக்கையை ஓட்டத்தில் ஈடுபடுத்தும் இயலுமை காணப்படுகிறது.

நடத்துனர்கள் மற்றும் சாரதிகளை உச்ச இயலளவுடன் சேவையில் ஈடுபடுத்த கூடுமான வகையில் கடமை சுழற்சியினை தயாரித்தல் மற்றும் அதிக வருமானம் கிடைக்கும் வீதிகளுக்கு முன்னுரிமை வழங்கி வருமானத்தை அதிகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ரூபாய்.200,000 ஆன வருமானம் ஈட்டும் வுனியாவில் இருந்து கொழும்பு வரை பயணிக்கும் 08 பயணத் தடவைகள் பொத்துவில் வரையிலான 02 பயணத் தடவைகள் மற்றும் வவுனியாவிலிருந்து கண்டி வரையிலான 02 பயணத் தடவைகளுக்காக பேருந்துகளை ஈடுபடுத்தி ஓட்டத்தில் சேர்க்காத காரணத்தால் 2022 ஆம் ஆண்டில் ரூபாய்.576 மில்லியனான மதிப்பிடப்பட்ட வருமானம் ஒன்று இழக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வ/ப புரவிடன் புறப்பட்டி லங்கா கம்பனிக்கு (Provident Property Lanka LTD) கையளிக்கப்பட்டிருந்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான ரூபாய்.10,250,500,000 தொகையான காணிகளின் பெறுமதி ஊழியர் நலன்புரி நிதியத்தில் முதலீடு செய்யப்பட்டு இலங்கை போக்குவரத்து சபைக்கு பணம் வழங்குவதற்கு 2016 ஜூன் மாதம் 07 ஆம் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்திற்கமைய தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த கம்பனியினால் அதற்கு உரிய பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. இலங்கை போக்குவரத்து கம்பனியினால் கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்த அந்த காணி இலங்கை | இலங்கை போக்குவரத்து சபை 2015 ஆம் ஆண்டுக்கு முன்பு இருந்து ஊழியர் நலன்புரி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய தொகையினை தீர்ப்பதற்கு தீர்வொன்றாக இ.போ.ச இற்கு சொந்தமாக காணப்பட்ட போதிலும் அக்காணிகளை முன்னர் பயன்படுத்திய நிறுவனத்திற்கு கையளிப்பதன் மூலம் கிடைக்கும் தொகையில் எஞ்சிய நலன்புரி நிதியத்தினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய இ.போ.ச இன் பொறுப்பில் காணப்பட்ட 13 காணி துண்டுகளின் அபிவிருத்தி செய்யப்படாத மதிப்பீட்டு பெறுமதியின் அடிப்படையில் அந்த காணிகளை மதிப்பீடு செய்து விடுதலை பத்திரங்களின் மூலம் பிராவிடண்ட் ப்ராபர்ட்டி லங்கா | சபைக்கு சொந்தமான காணிகள் வேறு தரப்பினருக்கு சாட்டப்படும் போது அக்காணிகள் தொடர்பில் சரியான வரலாற்று குறிப்புகள் மற்றும் பெறுமதிகளை பெற்றுக்கொண்டு அவற்றை உரிய முறையில் கணக்கு வைத்து கையளிப்பதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

போக்குவரத்து சபைக்கு மீளப் பெற்றுக் கொள்வதற்கு 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த காணிதுண்டுகளிடையே சபையின் போக்குவரத்து பணிகளுக்கு அத்தியாவசியமான ஹஸ்பவ, ஹோமகக, மஹரகம, மொரட்டுவ மற்றும் கட்டுபத்த டிப்போக்களுக்கு உரிய சுமார் 12.1566 ஹெட்டேயர்கள் மற்றும் பிலியந்தல பேருந்து நிறுத்தத்திற்கு உரிய சுமார் 0.3306 ஹெக்டேயர் காணியும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. தற்போது இந்த கம்பனி செயலிழந்துள்ளதாக கம்பனிகள் பதிவாளரின் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களுக்கு அமைய உறுதிப்படுத்தப்பட்டது. எனினும் 2023 ஜனவரி 23 ஆம் திகதிய அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய கம்பெனிக்கு கையளிக்கப்பட்டு இருந்த காணிகள் கோரிக்கை செய்த தரப்பினருக்கு சாட்டுவதற்கு காணிகளின் பெறுமதி இலங்கை போக்குவரத்துச் சபைக்கு செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட காரணத்தால் அந்த காணித் துண்டுகளை மீண்டும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சுவீகரித்தல் தொடர்பில் நிச்சயமற்ற நிலை ஒன்று உருவாகியுள்ளமை அவதானிக்கப்பட்டது.

கம்பனிக்கு சாட்டுவதற்கும் அதற்குரிய பணத்தினை பெற்று தருமாறு அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது. கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்கு சுவீகரிக்கப்பட்ட வேரஹர காணிக்காக கிடைத்த ரூபாய்.5,054 மில்லியன் தொகையில் இ.போ.ச இன் ஊழியர் நம்பிக்கை நிதியத்தினை செலுத்தி தீர்க்கப்பட்டுள்ளது.

(ஆ) பேருந்துக்களுக்கு தேவையான எரிபொருளை வழங்கும் போது சாரதியினால்

மஹரகம டிப்போ 9,916 லீட்டர் டீசல் மற்றும் கம்பஹா டிப்போவின் 17,402 லீட்டர் டிப்போங்கள் இர 8

எரிபொருள் விநியோகித்தல் தொடர்பில் முறையான உள்ளக

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்படும் சம்பவ குறிப்பு புத்தகங்களில் குறித்த பயணத்துடனான அதற்குத் தேவையான எரிபொருள் அறவினை குறிக்க வேண்டியதுடன் எரிபொருள் வழங்கப்படும் உத்தியோகத்தரால் குறித்த சம்பவக் குறிப்பு புத்தகத்தின் குறிப்பிடப்பட்ட அளவுக்கமைய இர-08 பாத்திரத்தில் பேருந்துக்கு பயன்படுத்தப்பட்ட எரிபொருளின் அளவு மற்றும் பேருந்தின் இலக்கம் பதிவு செய்யப்பட வேண்டும். எனினும் மஹரகம மற்றும் கம்பஹா டிப்டிபான்னளில் 2022 ஆகஸ்ட் மாதத்தினுள் சம்பவ குறிப்பு புத்தகங்களில் பதிவு செய்யப்படாத ரூபாய்.11,752,880 பெறுமதியான 27,318 லிட்டர் எரிபொருள் இர-08 பத்திரத்தில் பதிவு செய்யப்பட்டு பேருந்துக்களுக்கு வழங்கப்பட்டதாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | அறிக்கைக்கு அமைய பேருந்துக்களின் இலக்கம் குறிப்பிடப்பட்டிராமையால் வழங்கப்பட்ட எரிபொருளின் அளவினை சம்பவ குறிப்பு புத்தகத்தில் குறிப்பிட்டிராமையால் சபையின் நடைமுறைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளது. கணக்காய்வு அவதானிப்புகள் தொடர்பிலும் விசேட புலனாய்வு ஒன்றினை மேற்கொண்டு இரு மாதங்களினுள் அறிக்கை ஒன்றினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். எவ்வாறான போதிலும் விசேட புலனாய்வுகளில் ஏதேனும் மோசடிகள் இடம் பெற்றுள்ளதாக வெளிப்படுத்தப்பட்டால் பொறுப்பு கூற வேண்டியவர்களுக்கு எதிராக ஒழுகாற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன். | கட்டுப்பாட்டினை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியத்துடன் அது தொடர்பில் நேரடி கண்காணிப்பு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | மஹரகம டிப்போவில் 2022 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தின் இறுதி திகதியில் பேணப்பட வேண்டிய எரிபொருளின் அளவு 326,772 லிட்டர் ஆகும். எனினும் அத் திகதியில் எரிபொருள் கொள்கலன்களில் காணப்பட்ட உள்ளபடியான எரிபொருள் இருப்பு 48,598 லிட்டர்களாக பதிவு செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய ரூபாய்.119,614,820 பெறுமதியான 278,174 லிட்டர் எரிபொருள் பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டதுடன் அப் பற்றாக்குறைக்கு உரிய காரணங்கள் கணக்காய்விற்கு | கணக்காய்வு அவதானிப்புகளுடன் இணங்குவதுடன் இதன்போது சபையின் நடைமுறைகள் பின்பற்றப்படாது இருந்தமை தொடர்பில் முறையான விசாரணை மேற்கொண்டு துரித நடவடிக்கை எடுக்கப்படும். | பற்றாக்குறையினை அறிவிட்டு பொறுப்பு கூற வேண்டியவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

முன்வைக்கப்படவில்லை. இவ்வாறு பேணப்படும் எரிபொருள் இருப்பு பற்றாக்குறைக்காக சபையினாலும் மீளாவாண்டின் கணக்குகளில் ரூபாய்.36,799,884 ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே மஹரகம டிப்போவில் 2023 பிப்ரவரி 28 ஆம் திகதி நாளாந்தம் சேர்க்கப்படும் பணத்தை காப்பறையில் வைப்பு செய்திருந்தத்துடன் 2023 மார்ச் 01 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதிக பண பரிசோதனையில் காப்பறையில் காணப்பட்ட தொகையில் ரூபாய்.63,510 ஆன பற்றாக்குறையொன்று வெளிப்படுத்தப்பட்டது.

(ஈ) மீளாய்வாண்டில் நுவரெலிய டிப்போவில் இடர் மீட்பு வாகனம் ஒன்றுக்காக அசாதாரணமான முறையில் ரூபாய். 1,756,902 பெறுமதியான 4,841 லிட்டர் எரிபொருள் வழங்கப்பட்டிருந்த போதிலும் குறித்த இடர் மீட்பு வண்டியில் மைலோ மீட்டர் ஆனது செயலற்று காணப்பட்டமையால் மற்றும P-II பதிவேடு உரிய முறையில் பராமரிக்கப்படாமல் செய்வேலை மற்றும் பயணம் செய்த இடங்கள் தொடர்பிலும் எரிபொருள் நுகர்வு தொடர்பிலும் உரிய விபரங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் மேற்படி எரிபொருள் பாவனையை கணக்காய்வில் ஏற்றுக் கொள்ள முடியாதிருந்தது.

இந்த டிப்போவில் 29 ஸ்ரீ 0784 ஆம் இலக்கஇடர் மீட்பு வாகனத்திற்காக 4,841 லீட்டர் எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது. மைலோ மீட்டர் பழுது பார்ப்பதற்கு தேவையான உதிரி பாகங்கள் சந்தைக்கு இதுவரையிலும் கிடைக்கவில்லை. வழங்கப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைய வாகனத்தின் பயன்பாடு மற்றும் எரிபொருள் பயன்பாடு தொடர்பில் விசாரணை ஒன்றினை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கின்றேன்.

டிப்போவின் முகாமையாளர்களினால் மேற்கொண்ட பணிகளுக்காக எதிர்வரும் நிகழ்ச்சி திட்டங்களை சமர்ப்பிக்க வேண்டியத்துடன் வலய அலுவலகத்தின் கண்காணிப்பின் கீழ் மேற்கொண்ட பணிகள் தொடர்பிலான அறிக்கை ஒன்று பேணி செல்லப்பட வேண்டும்.

### 3.6 நிதியங்களின் குறைப்பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் 2022 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கை திட்டத்திற்கமைய நாளாந்தம் 5,794 பேருந்துகளை ஓட்டத்தில் ஈடுபடுத்த திட்டமிடப்பட்டிருந்தது. அப்பணியை நிறைவேற்றுவதற்கு தேவையான 840 எஞ்சின் தொகுதிகள் வருடாந்தம் பழுது பார்க்கப்பட்டு ஓட்டத்தில் ஈடுபடுத்த திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதற்கு திறைசேரி மற்றும் இலங்கை போக்குவரத்து சபையின் நிதி ஏற்பாடு ரூபாய். 661.50 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும் சபையினால் பழுது பார்க்கப்பட்டிருந்த பேருந்துகளின் எண்ணிக்கை 254 ஆக காணப்படுவதுடன் அதற்காக செலவிடப்பட்ட தொகை ரூபாய்.77.13 மில்லியன் ஆகும். அதற்கமைய எதிர்பார்த்த அடைவு இலக்கு 70 சதவீதம் எனும் குறைந்த அறவினை கொண்டிருந்தமையால் இலக்கிடப்பட்டவாறு பேருந்துகளை ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியாது இருந்தமை அவதானிக்கப்பட்டது. | எனினும் 2022 ஆம் ஆண்டுக்கான திட்டங்களை தயாரித்து இலக்குகளை விதிப்பதற்கு உரிய பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன் பின்னர் நாட்டில் ஏற்பட்ட எரிபொருள் பற்றாக்குறை காரணமாக போக்குவரத்து நடவடிக்கைகள் தடைப்பட்டமையும் உதிரி பாகங்களின் சந்தையில் இல்லாது போனமையும், 2022 ஆம் ஆண்டுக்காக பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிராமையும் போன்ற காரணங்களால் உற்பத்தி நடவடிக்கைகளை இலக்கிடப்பட்ட அளவிற்கு மேற்கொள்ள முடியாது இருந்தது. | நிலவும் வசதிகளை உச்சளவில் பயன்படுத்தி வருடாந்த நிதியேற்பாட்டினை ஆக்க பூர்வமாக பயன்படுத்தி பேருந்துகளை பழுது பார்க்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பழைய பேருந்துகளை பழுது பார்த்து ஓட்டத்தில் ஈடுபடுத்துவதனை நோக்காகக் கொண்டு குருநாகலை, யட்டிநுவர, கம்பஹா மற்றும் மல்லாகம் பிரதேசங்களின் வேலைத்தளங்களை மையப்படுத்தி பழைய 740 | நாட்டில் ஏற்பட்ட எரிபொருள் பற்றாக்குறை காரணமாக போக்குவரத்து நடவடிக்கைகள் தடைப்பட்டமையும், உதிரி பாகங்கள் சந்தையில் பற்றாக்குறையானமையும் இலக்கிடப்பட்ட அளவினை நிறைவேற்ற முடியாமைக்கு | செயல் நடவடிக்கை திட்டத்திற்கமைய நடவடிக்கை எடுக்கும் போது திறைசேரியின் மூலதன செலவினத்தினை மீண்டெழும் செலவின தலைப்புகளுக்கு மாற்றாதிருப்பதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | கியர் பெட்டிகள் பழுது பார்க்கப்பட்டு வாகன குழாம் ஓட்டத்தில் ஈடுபடுத்தக் கூடிய நிலைமைக்கு மாற்றுவதற்கு உற்பத்தி அலகிற்கு கிரயம் மற்றும் கிரயத்திற்கு 50 சதவீத இலாப எல்லையுடன் ரூபாய்.140.4 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டு இருந்தது. எனினும் 2022 ஆம் ஆண்டினுள் பழுது பார்க்கப்பட்ட கியர் பெட்டிகளின் எண்ணிக்கை 139 ஆக காணப்பட்டதுடன் அதற்காக செலவிடப்பட்டிருந்த தொகை ரூபாய்.18.12 மில்லியன் ஆகும். அதற்கமைய உத்தேச எல்லைகளின் அடைவானது 19 சதவீதம் ஆகும். | காரணமாக அமைந்திருந்தது. அவ்வாறே பொது திறைசேரிடமிருந்து கோரி இருந்த ரூபாய்.1,500 மில்லியன் 2022 ஆம் ஆண்டிற்காக ரூபாய்.750 மில்லியன் மாத்திரமே கிடைத்திருந்தது. அது போதுமானதாக காணப்படவில்லை. அதற்கமைய இலக்கிடப்பட்ட கியர் பெட்டிகளை உற்பத்தி செய்ய முடியாதிருந்தது. | நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் மூலதன நிதி ஏற்பாட்டிற்கு உரிய செலவின விடயத்தில் செலவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | வாகன குழாத்தினை ஓட்டத்தில் ஈடுபடுத்தக் கூடிய நிலைக்கு உள்ளாக்குவதற்கு திறைசேரி மற்றும் இலங்கை போக்குவரத்து சபையின் நிதியேற்பாட்டினை ஈடுபடுத்தி பிராந்திய வேலைத்தளங்கள் மற்றும் டிப்போக்களின் மூலம் 300 பேருந்து போட்கள் பழுது பார்ப்பதற்கு 2022 ஆம் ஆண்டினுள் ரூபாய்.238.5 மில்லியன் மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் பழுது பார்க்கப்பட்டு ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பேருந்துகளின் எண்ணிக்கை 180 மாத்திரம் ஆகும். | நாட்டில் ஏற்பட்ட எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக போக்குவரத்து நடவடிக்கைகள் தடைப்பட்டமையும் உதிரி பாகங்கள் சந்தையில் இல்லாமல் போனமையும் 2022 ஆம் ஆண்டுக்கான பெறுகை நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டிராமையும் ஆகிய காரணங்களால் உற்பத்தி நடவடிக்கைகளை இலக்கிட்ட அளவிற்கு நிறைவேற்ற முடியாது இருந்தது. அவ்வாறே பொதுத் திறைசேரியில் இருந்து கோரி இருந்த ரூபாய்.1,500 மில்லியனில் 2022 ஆம் ஆண்டுக்காக ரூபாய்.750 மில்லியன் மாத்திரமே கிடைத்திருந்தது. அத்தொகை போதுமானதாக காணப்படவில்லை. அதற்கமைய இலக்கிடப்பட்ட கியர் பெட்டிகளினை உற்பத்தி | செயல் நடவடிக்கை திட்டத்திற்கமைய நிதியேற்பாட்டினை உச்ச அளவில் பயன்படுத்தும் வகையில் பழுது பார்த்தல் மேற்கொள்ளப்பட்டு அவ் வாகனங்களை ஒன்று சேர்க்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செய்ய முடியாதிருந்தது. | |
| (ஈ) | 2022 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கை திட்டத்திற்கமைய பழைய பேருந்துகளை பழுது பார்த்து ஓட்டத்தில் ஈடுபடுத்துவதனை நோக்கமாகக் கொண்டு 2040 பழைய ஸ்டார்டர் மோட்டார்கள், 1200 பழைய டில்டநேட்டர்கள், 1080 எரிபொருள் பம்பிகள் மற்றும் 3000 எண்ணிக்கையான எரிபொருள் விதிப்புகளை பழுது பார்ப்பதற்கு மீளாய்வாண்டினுள் ரூபாய்.180 மில்லியன் ஆன மதிப்பீடு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் ரூபாய்.10.36 மில்லியன் செலவிடப்பட்டு 2022 ஆம் ஆண்டில் 14 ஸ்டார்ட்டர் மோட்டார்கள், 409 எரிபொருள் பம்பிகள் மற்றும் 1760 எரிபொருள் விதிப்புகள் மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டிருந்ததுடன் இந்த உதிரிப்பாகங்களை பழுது பார்த்து பயன்படுத்தும் இயலுமை சபைக்கு உள்ள போது அவற்றை பழுது பார்க்கும் பணிகளை மேற்கொள்ளாது வெளிவரியாக கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இதற்காக மீளாய்வாண்டினுள் சபையின் 04 வலயங்களில் மாத்திரம் செலவிடப்பட்டிருந்த தொகை ரூபாய்.1,205,210 என்பது அவதானிக்கப்பட்டது. | இ.போ.ச. வாகன குலாத்தில் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படும் பேருந்து பராமரிப்புக்கு தேவையான ஸ்டாட்டர் மோட்டார்கள், ஓல்டநேட்டர், எரிபொருள் பம்பிகள் மற்றும் எரிபொருள் விதிப்புகளை பழுது பார்ப்பதற்கு பிரதேச வேலைத்தளங்கள் மற்றும் டிப்போக்களின் கராஜிகளின் மூலம் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. எனினும் மீண்டும் 2022 ஆம் ஆண்டின் வெளிவாரி நிறுவனம் ஒன்றின் ஊடாக அப்பணியை நிறைவேற்றுவதற்கு இ.போ.ச. தலைவரால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்கமைய மீண்டும் வெளிவாரி நிறுவனம் ஒன்றினால் உதிரி பாகங்களை பழுது பார்த்தமையால் பிரதேச வேலைத்தளங்களின் மூலம் பழுது பார்த்தல்களை மேற்கொள்ளல் குறைவடைந்துள்ளது. | சபைக்கு சொந்தமான டிப்போக்கில் காணப்படும் வளங்கள் மற்றும் ஊழியத்தினை உச்ச அளவில் பயன்படுத்தி பேருந்துக்களை ஓட்டத்தில் ஈடுபடுத்த இயலுமான வகையில் பணிகளை திட்டமிடுவதற்கும் அதற்கமைய உற்பத்தியை அதிகரித்து வெளிவாரி கொள்வனவுக்காக செலவிடப்படும் கிரயத்தினை குறைத்துக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்க வேண்டியத்துடன் வருடாந்த நிதி ஏற்பாட்டினை மேற்கொள்ளும் போது முறையான கற்கை ஒன்றினை மேற்கொண்டு நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2022 ஆம் ஆண்டினுள் இலங்கை போக்குவரத்துச் சபையின் உள்ளக மனித ஊழியம் அல்லது வெளிவாரி நிறுவனங்களின் மூலம் தலைமை அலுவலகம் உள்ளடங்களாக 106 டிப்போக்கள் மற்றும் 160 பல்வேறு | 2022 ஆம் ஆண்டில் இந்த பணிகளை மேற்கொள்வதற்கு போதுமான தொழில்நுட்ப தரத்திலான பதவியணி இல்லாது இருந்தமை இதற்கு காரணமாகும். மேலும் மூலப்பொருட்கள் பற்றாக்குறையானமையும் | உள்ளக ஊழிய முகாமைத்துவத்தின் ஊடாகவும் உச்ச இயலளவுடனும் பழுதுபார்த்தல் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| அலுவலகங்களுக்காக ரூபாய்.142.04 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அப்பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | அமையும் விலைகள் அசாதாரணமான முறையில் அதிகரித்தமையும் இதற்கு தாக்கம் அளித்துள்ள ஏனைய விடயங்கள் ஆகும். | |
| (ஊ) அனைத்து டிப்போக்களினாலும் மிகை ஊதியம் கொடுப்பனவு நாளாந்தம் கிடைக்கும் வீதி பதிவேற்று வருமானத்தில் ரூபாய்.20,000 அல்லது ரூபாய்.30,000 ஆக ஒதுக்கம் ஒன்று மேற்கொள்ளப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. அதற்கமைய பரிசோதனைக்குள்ளாக்கப்பட்ட களுத்துறை பிரதேச அலுவலகத்தின் அவ்வாறு சேகரிக்கப்பட்ட ரூபாய்.50,065,000 ஆன தொகை 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக அவர்களின் நடைமுறை கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஒவ்வொரு டிப்போக்களினதும் மிகை ஊதிய நிதியத்திற்கான பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்படும் அங்கீகாரம் ஒன்றும் பெற்றுக்கொள்ளப்படுவதுடன் அந்த அங்கீகாரத்திற்கு அமைய இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச அலுவலகத்தின் கணக்குகளுக்கு சேகரிக்கப்படும். பிரதேச அலுவலகத்தின் நடைமுறை கணக்கிற்கு அவ்வாறு சேகரிக்கப்படும் தொகையை நாளாந்தம் இ.போ.ச இன் தலைமை அலுவலகத்தில் உள்ள சந்தை முதலீட்டு கணக்கிற்கு தொடர்புபடுத்தியுள்ளதுடன் அவ்வாறு அக்கணக்கிற்கு முதலீடு செய்வதன் மூலம் இதற்கான நலன் பெற்றுக் கொள்ளப்படுகிறது என்பதை குறிப்பிடுகின்றேன். | முறையான மேற்பார்வையின் கீழ் உரிய அங்கீகாரத்துடன் மத்தியபடுத்தப்பட்ட திட்டம் ஒன்றின் கீழ் நிதியங்கள் பேணிச் செல்லப்பட வேண்டும். |

## 3.7 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒறுகொடவத்த எரிபொருள் நிரப்பு நிலையத்தின் நிர்மாணத்திற்காக சபை 2018 மார்ச் 20 ஆம் திகதி தனியார் கம்பெனி ஒன்றுடன் ரூபாய்.61,014,316 பெறுமதியான உடன்படிக்கையை கைச்சாத்திட்டிருந்தது. உடன்படிக்கைக்கு அமைய நிர்மாண பணிகள் 2018 ஜூன் 30 | ஒறுகொடவத்த எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிய காலத்தில் பணிகள் நிறைவு செய்யப்படாமை தொடர்பில் லாப் இன்ஜினியரிங் தனியார் கம்பனியினால் வைக்கப்பட்டிருந்த ரூபாய்.3,051,000 பெறுமதியான செயலாற்றல் | ஒறுகொடவத்த எரிபொருள் நிரப்பு நிலையத்தினை செயல்படுத்துவதற்கு சுமார் ஐந்து வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்ததுடன் அதனுள் சபைக்கு |

ஆம் திகதி நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும் 2023 மார்ச் வரையிலும் நிர்மாண பணிகள் நிறைவு செய்யப்பட்டு எரிபொருள் நிரப்பு நிலையம் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிராததுடன் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக ஒப்பந்ததாரருக்கு ரூபாய்.32,118,352 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும் ஒப்பந்ததாரரால் உரிய முறையில் பணிகள் நிறைவு செய்யப்படாத காரணத்தால் உடன்படிக்கை இரத்து செய்யப்பட்டு மேற்கொள்ளப்பட்ட வேலைகள் தொடர்பில் மதிப்பீட்டு அறிக்கை ஒன்றும் எஞ்சிய பணிகளுக்கான மதிப்பீடு ஒன்றும் தயாரிக்குமாறு மத்திய பொறியியல் பணியகத்திற்கு (CECB) குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் இதுவரையிலும் இந்த மதிப்பீட்டு அறிக்கை மற்றும் மதிப்பீடு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனைகளில் எரிபொருள் நிரப்பு நிலையத்தின் கூரை முழுமையாக இற்றுப் போயிருந்தது உள்ளடங்களாக மேற்கொள்ளப்பட்ட பணிகள் உரிய நியமத்திற்கு அமைவாக அல்லாது கவனயீனமாகவும் திட்டமொன்று இல்லாமலும் மேற்கொள்ளப்பட்டு அவற்றுக்காக கொடுப்பனவுகள் பரிந்துரைக்கப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் தற்போது சபைக்கு ரூபாய்.8,978,845 ஆன நட்டத்தினை மேற்கொள்ள நேர்ந்திருந்தது. அவ்வாறே 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக ரூபாய்.11,565,320 செலுத்தி கொண்டுவரப்பட்ட 07 டீசல் மற்றும் பெட்ரோல் பம்பிகள் மற்றும் ஜெனரேட்டர் ஒன்றும் பாதுகாப்பற்ற முறையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன் ஜெனரேட்டரின் உத்தரவாத காலமும் நிறைவடைந்திருந்தது.

பிணைமுறி 2020.06.11 ஆம் திகதி இ.போ.ச இனால் பேணிச் செல்லப்படும் இலங்கை வங்கியின் கிளையின் 0001168517 ஆம் இலக்க கணக்கிற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நிர்மாண கட்டிடத்தின் கூரையானது முழுமையாக அல்லாது ஆங்காங்கே இற்றுப் போயிருந்தமையை ஏற்றுக்கொள்கின்றேன்.

அவ்வாறே எரிபொருள் நிரப்பு நிலையத்திற்காக சுப்ரீம் டிரேடிங் கம்பெனினால் பெற்றுக்கொள்ளப்பட்ட 07 எரிபொருள் பம்பிகள் மற்றும் ஏனைய உபகரணங்களில் இருந்து இதுவரையிலும் எந்த பயன்பாடும் பெற்றுக்கொள்ளப்படவில்லை என்பதையும் ஏற்றுக் கொள்கின்றேன். எரிபொருள் தட்டுப்பாடு நிலவிய காலப்பகுதியில் எரிபொருள் நிரப்பு நிலையத்தினை ஆரம்பிப்பதற்கு அறிவுரை வழங்கப்பட்டதுடன் அதனால் இனம் காணப்பட்ட ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பழுதுபார்த்தல் பணிகள் சிவில் இன்ஜினியரிங் வேலைத்தளத்தின் பணியாளர்களின் மூலம் உரிய பொருட்களை வழங்கி மேற்கொள்ளப்பட்டது.

அதற்கு செலவிடப்பட்ட தொகை ரூபாய்.704,958.74 ஆகும்.

பெற்றுக் கொள்ளப்பட வேண்டி இருந்த வருமானம் இலக்கப்பட்டிருந்ததுடன் எரிபொருள் நிரப்பு நிலையம் இற்று போய் சேதமடைந்துள்ளமைய ால் அதற்கு துரிதமாக செயல்பட்டு எரிபொருள் நிரப்பு நிலையத்தினை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## 3.8 ஏனைய அமைப்புகளுக்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அவிசாவல டிப்போவில் தொடர்ச்சியாக எரிபொருள் கடனுக்கு வழங்கியமையால் 13 டிப்போக்களில் இருந்து, 05 பிரதேச அலுவலகங்களில் இருந்து தலைமை அலுவலகத்தில் மற்றும் ரூஹுணு பஸ் கம்பெனியின் தலைமை அலுவலகத்திலிருந்து ரூபாய்.16,758,304 ஆன தொகை அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. நிலுவை பணம் அறவிடப்பட உள்ளபோது தொடர்ச்சியாக கடனுக்கு எரிபொருள் எரிபொருள் விநியோகம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் குறித்த கடன் தொகையை அறவிடுவதற்கு எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கடன் பணத்தை பெற்றுக்கொள்வதற்கு தலைமை அலுவலகம், பிரதேச அலுவலகம் மற்றும் டிப்போக்களுக்கு கடிதங்கள் சமர்ப்பித்துள்ளதுடன் அந்த பணம் இதுவரையிலும் டிப்போவிற்கு அனுப்பப்படவில்லை. | நாளாந்தம் எரிபொருள் விநியோகித்தலுக்கு உரிய கொடுப்பினை செலுத்தி விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் டிப்போவின் மூலம் எரிபொருள் விநியோகிப்பதற்கு முறையான கட்டுப்பாடு உருவாக்கப்பட வேண்டும். |

## 3.9 வாகனக் கட்டமைப்பு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான ரூபாய்.2,063,693,707 பெறுமதியான 433 குத்தகை பேருந்துகள் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ள படியாக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களில் உள்ளடக்கப்பட்டு இருந்ததுடன் அவற்றுள் ரூபாய்.1,952,651,849 கிரயமான 409 பேருந்துகள் உரிய பிரதேச மற்றும் டிப்போக்களில் இனங்காணப்பட்டிராதத்துடன் ரூபாய். 96,896,702 கிரயமான மேலும் 21 பேருந்துகள் எந்த டிப்போவிற்கு உரியது என்பது இனங்காணப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இந்த | குறித்த வழு இடம்பெற்றுள்ளது என்பதனை ஏற்றுக் கொள்கின்றேன். | சொத்தொன்று என்பதால் பேருந்துகளின் நலனாளிகளுக்கு உள்ள உரித்து மற்றும் நிலவுகையினை உறுதிப்படுத்தும் வகையில் சொத்துக்களை பதிவேட்டிற்கு உட்படுத்தி சரியான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட வேண்டும். |

பேருந்து மோட்டார் போக்குவரத்து ஆணையாளரின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் அவற்றின் பதிவு இலக்கம் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 முகாமைத்துவ தகவல் கட்டமைப்பின் விளைதிறன்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தற்போது இலங்கையினுள் நிகழ்ச்சி பகுப்பாய்வு உத்தியோகத்தர்களால் அபிவிருத்தி செய்யப்பட்ட apps.sltb.lk மற்றும் Erp.sltb.lk வலையமைப்பு Server இனுள் நிறுவப்பட்டுள்ள ERP மென்பொருள், இறுதிக் கணக்குகளை தயாரித்தல் மற்றும் நிதியீட்ட நடவடிக்கைகள் மற்றும் இருப்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை முறைமைப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் Saga Acc Pack Accounting மென்பொருள், இ.போ.ச. வலைதளத்தின் ஊடாக வழங்குனர்களை பதிவு செய்யும் மென்பொருள் 10,750 இலத்திரனியல் டிக்கெட் இயந்திரங்கள் தொடர்பிலான தகவல்களை பரிமாற்றிக் கொள்ளும் btm.sltb.lk web Application இன் ஊடாக பயன்படுத்தப்படும் இலத்திரனியல் டிக்கெட் இயந்திர மென்பொருள் கட்டமைப்பு, பேருந்து ஆசனங்களை ஒதுக்கும் ESAT.SLTB.lk வலைத்தளத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் மென்பொருள், முப்படையினர் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு | மத்தியப்படுததப்பட்ட கட்டமைப்பொன்று காணப்படுதல் மிகவும் அத்தியாவசியமான பணி ஒன்றாக கருதப்படுவதுடன் அதற்கு தடையொன்றும் இல்லை. தகவல் தொழில்நுட்பத்திற்கு ஒரு மத்தியப்படுத்தப்பட்ட தகவல் கட்டமைப்பொன்றினை கொள்வனவு செய்வதற்கு உரிய ஆரம்பப் பணிகள் பிரதி பொது முகாமையாளர் (நிதி) இன் கீழ் தற்போது இடம்பெற்றவாறு உள்ளது. | அனைத்து தகவல் கட்டமைப்புகளும் தொடர்புபடுத்தப்படும் வகையில் மத்தியப்படுத்தப்பட்ட தகவல் கட்டமைப்பின் ஊடாக செயற்பாட்டு பணிகள் திட்டமிடப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| இலவச பயணச்சீட்டுகளை வழங்கும் மென்பொருள் மற்றும் பொலிஸ் உறுதி சீட்டுக்களை உள்ளடக்குவதற்கு உருவாக்கப்பட்டுள்ள மென்பொருள் எனுமாறு 07 மென்பொருட்கள் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் அந்த மென்பொருட்களின் மத்தியப்படுத்தப்பட்ட Server ஒன்றின் ஊடாக இணைப்பு செய்யப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) சபையினால் இரு தகவல் பகுப்பாய்வாளர்களுக்கு ரூபாய்.75,000 படியான மாதாந்த சம்பளம் செலுத்தி தயாரிக்கப்பட்ட மனிதவள முகாமைத்துவ கட்டமைப்பு (புதிய), பணிப்பாளர் சபைப்பத்திரங்கள் உள்ளடக்கும் தகவல் கட்டமைப்பு, ஆவணங்களை பரிமாற்றும் தகவல் கட்டமைப்பு மற்றும் பங்கு சான்றிதழ்களை வழங்குவதற்கான 04 மென்பொருட்களை நிறுவியுள்ள போதிலும் அந்த உத்தியோகத்தர்கள் சபையில் இருந்து அகன்று சென்றதுடன் அந்த தகவல் கட்டமைப்பு மற்றும் மென்பொருளும் செயலற்ற நிலைக்கு உள்ளாகியுள்ளதுடன் அதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினங்களும் விளைவற்றதாகி இருந்தமை அவதானிக்கப்பட்டது. | இ.போ.ச. நிர்வாக தீர்மானங்களின் அடிப்படையிலும் மென்பொருள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களினால் பழைய கட்டமைப்புகளை இற்றைக்கு பொருத்தமான முறையில் நவீனமயப்படுத்தப்படாமையாலும் கட்டமைப்புகளின் பாதுகாப்பற்ற தன்மை, அறிக்கைகளை பெற்றுக்கொள்தல் சிக்கலாக காணப்பட்டமை, தொழிற்சார் உத்தியோகத்தர்களின் சபையின் சேவைக்கு சேர்க்காமையால் இந்த கட்டமைப்பு தோல்வியடைவதற்கு காரணமாக அமைந்திருந்தது. | செயலற்ற நிலைக்கு உள்ளாகியுள்ள கட்டமைப்புகள் மற்றும் மென்பொருட்களை செயலிழந்தமைக்கு காரணங்களை கண்டறிந்து இடம்பெற்ற நட்டத்தினை தீர்ப்பதற்கும் அனைத்து கட்டமைப்புகளுக்கும் புதிய மத்தியப்படுத்தப்பட்ட கட்டமைப்பு ஒன்றினை நிறுவுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 4.2 பாதீட்டுக் கட்டுப்பாட்டு

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்துகளை புனரமைப்பதற்காக பொதுத் திறைசேரியின் செலவின தலைப்பு 436-02-03-01-2201-12 இன் கீழ் 2022 ஆம் ஆண்டுக்காக | பதில் வழங்கப்படவில்லை. | திறைசேரியின் மூலம் வருடாந்த ஒதுக்கீட்டு அதிகார சட்டத்தின் ஊடாக ஒதுக்கப்பட்ட மூலதன செலவினங்கள் |

| | | |
|---|---|---|
| ஒதுக்கப்பட்டிருந்த ரூபாய்.750 மில்லியன் தொகையில் சபையினால் பேருந்துகளை புணரமைப்பதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபாய்.606,310,000 ஆன தொகை மூலதனமாக்கப்பட்டு வருடாந்த பெறுமானத் தேய்விற்கு உட்படுத்தப்படாது மொத்த தொகையும் வருடாந்த நட்டமான ரூபாய்.157,553,197 இற்கு கொடுப்பனவுகள் மற்றும் நிவாரணங்களின் கீழ் சீராக்கப்பட்டமையால் 2022 டிசம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்காக ரூபாய்.484,219,604 ஆன இலாபம் காண்பிக்கப்பட்டிருந்தது. | | உரிய முறையில் பயன்படுத்தப்பட்டு முகாமை செய்யப்பட்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4.3 சுற்றாடல் பிரச்சினைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| போக்குவரத்து சபைக்கு உரிய அனைத்து டிப்போ வளாகங்கள் மற்றும் பிரதேச வேலைத்தளங்களில் உள்ள நிலையங்களில் எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி எண்ணெய் கழிவுகள் மற்றும் பிளாஸ்டிக் மற்றும் இலத்திரனியல் கழிவுகளை அகற்றுவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறை ஒன்று பயன்படுத்தப்பட வேண்டியதுடன் அதற்காக 2008 ஜனவரி 25 ஆம் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிசட வர்த்தமானியின் மூலம் மற்றும் 1980 இல் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகார சபை சட்டத்திற்கமைய மத்திய சுற்றாடல் அதிகார சபையில் இருந்து அனுமதி பத்திரம் ஒன்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதாக காணப்பட்டது. எனினும் சபைக்குரிய 06 பிரதேசங்களின் தரவுகளுக்கு அமைய அந்தப் பிரதேசங்களுக்கு உரிய டிப்போக்கள் மற்றும் 58 வேலைத்தளங்களின் டிப்போக்கள் மற்றும் 29 வேலை தளங்களில் | பதில் வழங்கப்படவில்லை. | சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கழிவுகளை அகற்றுவதற்கு உரிய இடத்திற்கான சுற்றாடல் அனுமதி பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

எண்ணிக்கை சுற்றாட அனுமதி பத்திரத்தினை பெற்றிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 4.4 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலுக்கு அமைய அந்த நிகழ்ச்சி திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான வளங்கள் மற்றும் இயலளவோ இனம் காணப்பட்டு அதனை பாதுகாப்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவது பரிசோதிப்பதற்கு சபையினால் பயன்படுத்தப்படும் செயலாற்றல் குறிகாட்டிகள் (KPI) என்ன என்பது இனங்காணப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை. | ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலுக்கு அமைய சபையினால் இனம் காணப்பட்ட செயலாற்றல் குறிகாட்டிகள் (KPI) தயாரிக்கப்பட்டு அதற்கான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |